3L
m24,1128K4
N28·132,
18905

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா		காரியாலயம்:—
இந்தியா, பர்மா, ஸிலோன்	ரூ. 7 8 0	No. 11, வெள்ளாளர் தெரு,
புற நாடு	ரூ. 9 0 0	புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ஹு ஆகஸ்டுமீ 9உ [No. 32.

20 NOV 1928 MADRAS

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	621
2.	காந்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L.	623
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	625
4.	தமிழ்ப் பாடம்	628
5.	சிவகாமி சரித ஆராய்ச்சி N. துரைக்கண்ணன்	630
6.	தேவாரமும் ஐந்திணையும் E.N. தண்ணிகாசலமுதலியார் B.A., B.L.	632
7.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A., B. L.	635
8.	வர்த்தமானம்	639

கலா நிலயம்.

சொல்வோரிற் கேட்பவ ரருமை VI.

18905

மனிதனுடைய பெருமை அலகிலா தென்பதும், அப்பெருமையை அவனவன் அறிந்து நம்பிக் கொள்வதற்கு ஆதாரமாயிருக்கின்ற பெரியோர் களே உண்மைக் குரு ஆவா ரென்றும், மனம் முதிர்ந்து தன்னின் பெருமையை எய்துவதற்கு முன் அவசியாவசரம் இடைப்புகுந்து அதனைச் சிதைக்கு மாற்றையும் இரவீந்திரநாதரின் உதவி கொண்டு இதுவரை விளக்கிவந்தோம்.

இன்னபடி அவலமாய்க் கிடக்கின்ற உலகத்தை முன்னரங்கே சொன்னவகை ஓமென்ற சொல் லோடு ஒன்றான உத்தமர்கள் என்றவரே உய்விக்க வல்லவர்கள் ஆகுவிதம் யாவதென்று பின்னுமினிப் பேரறிவால் புலவர்பிரான் பிரித்தோதிக் காட்டுகின் றார். எந்தமனிதனும் ஒருபாற் பட்டவனல்லன். பற் பல தன்மைகள் தன்னுளே பெற்றவன் அவன். அவனுயமைந்த நானாவிதமான அம்சங்கள் ஒன்றோ டொன்று முரணாமல் கலந்திணங்கி எல்லாம் பூரண முதிர்ச்சியடையுமாறு செய்யும் சான்றவர்கள்தாம் மற்றவரால் பின்பற்றற்கு உரியவராவாரேயன்றித் தனித்தனி அம்சங்களைத் தட்டியெழுப்புவாரால் பெறக்கூடிய நன்மை ஒன்றுமில்லை. நலமிது தீது மிது என்று ஆய்ந்து கொள்ளும் அறிவும்; தரும மிது அதருமமிது என்று தேர்ந்து கொள்ளும் ஓர் வும்; அழகிது அல்லதிது என்று உணர்ந்து கொள் ளும் உணர்வும்; துன்பத்தை விலக்கி இன்பமிது என்று ஆசைகொள்ளும் விருப்பும்; இறைவன்பால் பிடித்திழுக்கும் பக்தியும்; ஒவ்வொரு கூறு எல்லா மனிதர்களுள்ளும் பொருந்தியுள்ள முக்கியமான அம்சங்களிற் சிலவாகும். இவைகள் எல்லாம் சம மாக ஒருங்கே வளர்ந்துகொண்டு வந்தால்தான் அவன் தன்பெருமையின் நிலையாய பூரணதசையை அடைபவனுவன். அல்லாது, ஒன்றற் கொன்று வளர்ச்சியில் ஏற்றந்தாழ்விருக்குமாயின், எந்நாளும் உய்யமாட்டான், மற்றவரை உய்விக்க வல்லவனு மாகான். இந்த விதியை மனதில் வைத்துக்கொண்டு நம் இரவீந்திரநாதர் மனிதனின் அம்சங்களில் ஒவ்வொன்றே பற்றி இக்காலம் செய்கின்ற சில 'பிரசாரங்களைக்'குறித்து ஆராய்கின்றார்.

இவ்வாராய்ச்சியால் அவர் முதலில் விலக்குவது அறிவு. இதனால்அறிவு பயனிலதென்று அவர் புறக் கணிக்கின்றா ரெனச் சிறிதும் எண்ண வேண்டா. 'அறிவே ஆற்றல்' என்னும் கொள்கையோடு, அழகு தர்மம் அன்பு முதலிய அம்சங்கள் வளர்வ தற்காதாரமாய முயற்சிகளினின்று அறிவைப் பிரித் துப் பாராட்டுவது பயனற்றதாம் என்பதே அவர் துணிபு. உலகாநுபவத்தில் இவ்வுண்மையை ஒவ் வொருநாளுங் காண்கிறோம். அறத்தை அறிவுறுத் தும் நூள்கள் எண்ணிறந்தன எங்கும் உள. இதனை ஓதுவாரும் ஓதுவிப்பாரும் இலராகார். எனினும் இன்னதற மென்பதும் அவ்வறத்தின் மேன்மையை யும், அல்லாததால் வருந்தீமையும் அறிந்தோர் யாவ ரும் அவ்வறத்தா றொழுகுகின்றன ரெனக் கூற இய

லாது. நன்னெறி யிதுவென்று நூறுபேர்களுக்குப் போதிப்ப தெளிது. மற்று, போதனை செய்தவனே, தானுரைத்த அந்நெறியைத் தானே அந்நூற்றுவரிலொருவனுய்த் தொடர்த லருமை. சட்டவிரோதமாய்க் களவு கொலை ஆதியாய குற்றங்கள் இழைப்போன், அச்சட்டம் ஒன்றுளதென்றறியாததாலோ அக்குற்றங்கள் புரிகின்றுன். மது வருந்துவோர் யாவர்க்கும் அதனுல் வருந்தீமைகள் அந்தனையுந் தெரியுமே. இன்னுமிப்படியே ஒவ்வொன்றையும் உற்று நோக்கினுல், நலம் நலிந்து தீமை மலிவதற்குக் காரணம் அறியாமை யன்றென்பது எளிதிற் புலப்படும். ஆதலால் கல்வியென்னும் பேரோடு மொழிப் பயிற்சியும் சாஸ்திரப் (Science) பயிற்சியும் அளிப்பதே முதலாக வைத்து, இதனுல் மனிதனில் பகுத்தறிவைப் பலப்படுத்தி, அவ்வாறு பலப்பட்ட பகுத்தறிவினுல் மாத்திரம், சத்தியத்தை ஓர் சாதனமேயாகக் கையாள்வதால் விளையும் அவசியாவசரத் தீமையை விலக்குவதென்பது ஆகவே ஆகாது. இயற்கையா யொருவனுக்குள்ள பகுத்தறிவேனும், அல்லது கல்வியால் பயின்றடையும் அறிவேனும், மற்ற அம்சங்களும் இணையாகச் சேராது தான் மாத்திரம் வளருமாயின், வெல்லாமலெவரையும் மருட்டிவிட வகைதந்த வித்தையாய் முடியுமேயல்லாது முத்தி தந்திடாது.

இனி, மற்ற அம்சங்களை நினையாது, அறிவை மாத்திரம் தட்டி யெழுப்பினுல் அது அவலமாய்ப் போவது போலவே, அறிவை அகற்றிப் பக்தி முதலிய பிறவற்றைப் பயில்வதிலும் பயனில்லை. அவ்வாறு செய்யின் வெகு விரைவினில் அது மூடபக்தியாய் மூள்கின்றது. காமக் குரோதாதிகள் மனதைப் பிடித்திழுக்க வாய்தான் அர்த்தம் தெரியாத மந்திரத்தை முணுமுணுக்கவும் பின், வாயோ வைதிருக்கக் கைதான் விடாமல் சபமாலையை உருட்டவும் சில மாந்தரிடைக் காண்கின்றோம். ஆதலால் ஞானத்தோடு தோளுக்குத் தோள் சமமாக வல்லாது, ஒவ்வொருவனது இயற்கையிலும் ஒரு கூறுயுள்ள பக்தியை மாத்திரம் பற்றிப் 'பிரசாரம்' செய்வது பயனற்றதாகி முடியும் என்பதற்கு இரவீந்திரநாதர், திபத்துத் தேசத்தில் ஒரு சக்கரத்தை வைத்துக்கொண்டு சுற்றுவதே செபம் என்று ஆகிவிட்ட நிலையை உதாரணமாய்க் காட்டுகின்றுர். அறிவிற் புகுத்தாமல் நெட்டுருச் செய்வித்துப் பரீக்ஷையைக் கடக்குமாறு செய்கின்ற உபாத்தியாயருக்கு நிகராகப் பெரும்பான்மை, பக்திப் பிரசாரகரும் ஆகிவிடுகின்றனர்.

அரசியல் முறையை ஒட்டித் தற்காலம் செய்கின்ற பிரசாரமெல்லாம்(Political Propoganda) மிகக் கொடியன வென்றும், உலகத்திற்கே ஆபத்திற் கிடமானவைகளென்றும் நம் கவிவரர் கூறுவது ஆழ்ந்து நோக்கற்பாலது. உலகத்துப் பொருள்களால் புறத்திருந்து இன்பம் வருவதற்கு இயலு மென்றவோர் மயக்கத்தைத் தனக்காதாரமாகக்கொண்டு தடிப்பன இப்பிரசாரங்கள். வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்னும் விதியைப் பின்பற்றிநடக்கும் இப்பிரசாரங்கள், மனிதனுக்குள்ளிருக்கும் சுயநயப்பற்றுகிய அம்சத்தை வளர்ப்பதற்குரியன. தர்மாதர்ம நினைவைத் தூண்டும் அம்சமும் இதனேடு சேர்ந்து சமமாக வளர்வதில்லை... வாய்மையே நோக்கின், கூறுவோர் பலகூறினும்... வளர இயலாது. ஆதலால் பூரணத் தன்மைக்கு இயலாத அரசியல் வாதம் யாவும் மனிதனின் ஆசையெனும் ஒரு அம்சத்தையே தட்டியெழுப்ப, அது மற்ற அழகு அன்பு தருமம் முதலிய அம்சங்களிலிருந்து பிரிந்துபோகித் தனியே வளர்ந்து குரூரமே உருவாக முதிர்கின்றது.

கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக வசதிகள், தொழிலின் வளர்ச்சி முதலியன பொருளால் வரும் சுகமென்ற ஒன்றினிற் சுவாவும் மாறுட அம்சத்தைப் பொருந்தி நிகழும். இது எல்லாவற்றின் பயனையும், பணம் என்ற ஒரு அளவையையே கொண்டு மதித்துப் பணமும் பணந்நிற் கிடானது மல்லாதவைகளொன்றும் பொருளல்ல வெனும் புத்தி ஒன்றையே புகட்டிநிற்க, அழகிற்கு விலையில்லாததால், அவ்வழகெனும் அம்சம் தலையெடுக்காமல் போகின்றது. அதுவுமன்றி இக்காலத் தொழில் வகைகளிலும் வர்த்தக முறைகளிலும் எத்துணையளவு தர்மசிந்தனை கலந்திருக்கக் கூடுமென்பது மிகவும் சந்தேகத்திற் கிடமானது. எனின் பூரணத்திற் குரியது இந்தப் பிரசாரமு மன்று.

தற்காலக் கைத்தொழில் முறைகளில் இக்குறைகள் உளவென்று, எந்திரங்கள் ஆதியாய சாதனங்களைத் துறந்து முற்கால முறைகளைக் கையாளச் சொல்கின்ற கதர் பிரசாரத்தையும் இரவீந்திரநாதர் ஒரு சிறிது குறிக்கின்றுர். அம்சங்கள் எல்லாம் பூரணமாகாது பின்னமாய் நிற்றலால் இப்பிரசாரத்திலும் பயனில்லை என்பர். ஆனுல், சத்தியத் தூய்மையை அந்தத்தில் எய்தலா மென்றும் இந்தியர் வறுமை சமீபத்தில் நீங்குமென்றும் கதர் பிரசாரம் செய்யப்படுவதால், அது இரவீந்தரநாதரின் பாகுபாட்டின்படி மனிதனுக்குரிய எந்த அம்சத்தைப் பற்றிய தென்றேனும் விலக்கிய தென்றேனும் விளங்கவில்லை. பூதசாஸ்திரங்களை ஏற்காத வோர் மலடாகி அது இருக்கின்ற தென்பாரேனும், பூதசாஸ்திரங்களை அநுசரிப்பது எவ்வம்சத்தின்பாற் படும் என்பது ஐயமே. ஒருவேளை, உள்ளதினின்று மேல் உயர்வது (progress) வேண்டுகின்ற அம்சமோ யாதோ! ஆயின், இக்கால முறைகளோடு முன்னேறுவதில் உளவாகிய தீங்குகளுக் கஞ்சி, அவைகளுக்குத் தோள் கொடுக்கும் தீரமில்லாமல் பின்னேடிப் போவதென்றுல் ஆன்மசக்தியை வளர்ப்பதற் கெதிராக ஒடுக்குவதேயாகும். சுலபமான மார்க்கமெல்லாம் செம்மையான மார்க்கமுமாகும் என்னலியலாது. கதர் பிரசாரம் கூறுவது "இக்கால முறைகளி லீடுபட் டுய்வது கஷ்டம், ஆதலால் விட்டுவிட்டுப் பண்டைநாள் வழிகளுக்கே வந்திடுங்கள்" என்னும் இதுவாயின் இப்புத்தி வீர மற்றதென்று நம்கவி ஏற்க இசையார். ஆனுல் கதர் காட்டுங் கதி இவ்வணத்ததன்றென நாம் நினைக்கின்றேமாகையால், நம் கவிஞர் அதுபற்றிக் கூறியது எத்துணை பொருந்துமெனும் ஐயம் எஞ்சி நிற்கின்றது. இது எவ்வாருயினும்:

> புருஷார்த்த சாதகங்கள் நிறைவதற்கான மார்க்கம் கஷ்டமானதெனும் யதார்த்த வீரத்திற்கு எழுப்ப வருகின்ற ஒருவரையே நமது உண்மைக் குருவாகத் தெரிந்துணர்கின்றேம்,

என இரவீந்திரநாதர் சாற்றுவது முற்றிலும் வாய்மையே. கஷ்டமிது, ஆதலால் புறங்காட்டுவோம் என்னுது, மார்பு தருவோம் என்பதே எந்நாளும் எவ்விடத்தும் தக்கது.

காந்திமதி என்னும்
காந்தாரநாட்டுக் கட்டழகி.

(605-வது பக்கத் தொடர்ச்சி)

28. தனக்கு விஞ்சியதோ தெய்வம்!

கடல்மடை திறந்தாலென்னக் காவலர் சேனை யுள்ளோர் அடைத்துள கதவைத்திறக்க ஆர்வமோடகழைத் தாண்டிக் கொடிகளும் வில்லும் வாளும் குலுங்கிய கையராகி இடமெலா மிடைந்து பொங்கக் கோட்டையுளெங்குஞ் சூழ்ந்தார். இதற்கிடையில் கோபுரத்திருக்கை விட்டு, நரபாலன் காந்திமதி தாமோதரன் ஆயினேர் இறங்கி வருவதைக் கண்ணுற்ற கஜேந்திரவிம்மன் மற்றிரு அரசரையும் தன்னேடு அழைத்துக்கொண்டு மதிளின்மீதேற, இருதிறத்தோரும் புரிசையின் தளத்தின்மீது சந்தித்தனர். வந்தவர்க்கருகே மாதவி இல்லாததுகண்டு கலக்கமெய்திய காந்திமதியைக் கஜேந்திரவிம்மன் அணுகி, "மாளிகையுள் இருப்பதாகப் பாண்மகள் குறித்தவள் நீதானே, பெண்ணே—அங்கங் குலையவென் அஞ்சுகின்றுய்—நீ யறிந்ததைச் சொல்" என்று கேட்கக் காந்திமதியும், தான் மாளிகை வந்தநாள்தொட்டு அப்பொழுது மகோதரனைக்கொண்டு நரபாலன் சித்ராங்கனைக் கொல்வித்ததாக்க் கூறியவரையில் யாவையும் சுருக்கமாகச் சொல்லினுள்.

சித்ராங்கனின் சரித்திரம் முடிந்தவிதம் இதுவென்று, மூர்க்கனெனும் பேர்படைத்த கஜேந்திரவிம்மன் கேட்டு, "அட சிறுவா, என்பால் நீ இழைத்துள பிழை பெரியதேயாயினும் இக்கதிக்கு ஆளாகவோ நீயென்று என்மனம் உளைகின்றதே! என்செய்வேன். மந்தாகினிப் பேதாய், நீ புரிந்த பூசையெல்லாம் புலம்புதற்கே ஆயிற்றே!" என இரங்கி, மாற்றுன் என்ன நின்ற அந்த மணிவாளனை, "மன்னவா இன்று நின்குடர் குளிர்ந்ததோ" என்றியம்ப வாயெடுக்கையில், தலையிற் கைவைத்துத் தாழ்ந்து சோர்ந்த அவன் முகநோக்கி, "நண்ப, நம் வழக்கு நடந்தவிதம் இதுவேயோ!" என்றே அவன் தோள்களைத் தொட்டழுதான். இச்சமயம் நரபாலனின் காதோ டேதோ தாமோதரன் பேச முயல்வதைக்கண்ட காஷ்மீரத்தரசன், "மேலினிச் செய்வன சில விருக்க இங்குநீர் வேந்தர்காள், விம்மித் தாழ்வதுமாகுமோ!" என்றனன்.

கஜேந்திர விம்மனும், "ஆம், ஆம்," என்று கூறித் தன் படைவீரரைக் கூப்பிட்டு, "இங்ஙனே, அரைக்கணத்திற்குள் ஓர் தூக்குமரம் நாட்டி, நம் கண்கரிக்க நிற்கின்ற இக்காதகர் இருவரையும் தொலைத்திடுங்கள்" என்று கட்டளை இட்டான்.

"ஆனுல், பெயரிற்காவது ஒரு விசாரணை நடத்திய பின்னரே தண்டிப்பது நியாயமல்லவா?" என்றுன் காஷ்மீரத்தரசன்.

"இப்பேய்களைப் பிய்ப்பதற்கு நீதியும் முறையும் நினைக்கவேண்டுமோ—நுமக்கு ஆசை யிருக்குமாயின் மண்டபத்திற்குட் சென்று விசாரணை அத்தனையும் செய்துகொள்ளுங்கள்.........போங்கள்......குற்றவாளிகள் இவ்விடமே இருக்கட்டும். தீர்ப்பு முதலில் தருபவர் நீவிரோ, தண்டனையை முதலில் நிறைவேற்றுபவன் நானே பார்ப்போம்!"

"என் நாட்டு முறைப்படி நடுநிலை நியாயம் சொல்லப் பொதுமனிதர் சிலர் மன்றத்தி னங்கத்தினராய் அமைதல் வேண்டும்"

"எயில்புறஞ் சென்று அங்கிருப்பவரிற் சிலரைத் தேர்ந்தழைத்துக் கொள்ளுங்கள்."

மணிவாளனும் காஷ்மீரத்தரசனும் கீழிறங்கிச் சென்றுர்கள். தூக்குமரம் நிறுவிக்கொண்டிருந்த ஆள்கள் குற்ற ஆராய்ச்சி முடிந்த பிறகுதான் தம் காரியம் தொடங்கவேண்டும் என்று எண்ணி இருப்பது கண்ட கஜேந்திரவிம்மன், "உங்களுக்கிட்ட வேலையை உடனே முடியுங்கள். துரிதமாய்த் தூக்கிலிட்டுப் பின் தாமதமாய் விசாரித்துக் கொள்ளலாம்" என்றுன்.

இதுவரையிற் சும்மா விருந்த நரபாலன், கஜேந்திரவிம்மனின் காலில் விழுந்து தள்ளாடும் தன்னுயிர்க்கு மன்றுடினுன். அவனைக் கஜேந்திரவிம்மன் ஓங்கி உதைத்துச், "சீ சீ, கொடியோய் இங்கு விழுந்து மண்ணைத் தின்பதிலும் அங்குச் சென்று அவ்வேலைக் கொருகை கொடுத்தால் கருமமேனும் கடிதின் முற்றும்," என்று தூக்குமரம் நாட்டு மிடத்தைக் காட்டினுன்.

"ஹி! ஹி! மெய்யே புகன்றீர். எம் பிரபு நரபாலருக்கு ஒரு கைதான் கொடுக்க முடியும். தலையைத் தருவதற்கு வாக்குறுதியாய் ஒருகை முன்னரே இவர் அளித்திருப்பதை அறியாதார் யார்! ஹி! ஹி!" என்று தாமோதரன் பேயெனச் சிரித்தான்.

நமனுக்கெதிரிலே நகையாடும் இப்பித்தனைக் கண்டு யாவரும் வியந்திருப்பாரிடையே படைஞன் ஒருவன் வந்து, "வேந்தே, பந்தற்கால் நட்டாய் விட்டது" என்றதும், கஜேந்திரவிம்மன், "வைத்தியப் பைத்தியமே, நீயே முதல்" என்றனன்.

"இல்லை, இல்லை. நாங்கள் மூவர் மும்மூர்த்திகள். மூவருக்கும் முதல்வன் வேறொருவன் இருக்கின்றுன்."

"எங்குளன்?"

"கழுத்திலே கயிறிழுக்கும் தருணத்திலும் என் புத்தியின் கூர்மை மழுங்காதாகையால் அவனின்னுனென்றியம்பேன். அவன் விதித்த இவ்விளவரசனின் கொலையை முடித்ததோடே நாங்களும் மாண்டோம் என்பது அவனுக்கு மகிழ்ச்சி தரும். எனினும், மன்ன, நின்னுயிரகற்றுவதும் அவனுக்கு இன்றியமையாது. ஆதலால், எம்மை நீ இங்கு மாய்க்கின்ற பழியைத் தீர்ப்பதற்கு அவனைக் காத்துவைத்தல் என் கடனுகின்றது"

"முதல்வன் கிடக்க, நீவிர் மூவர் என்றுய், மற்றவன் எவன்?"

"மகோதரன். அவனையே தேடிப்பிடித்து வந்து முதலில் தூக்கிலிடவேண்டும். அவன் முன்னரே ஒரு தாம் ஒத்திகை பார்த்திருக் கின்றுனதலால், இந்தத் திரிசங்குத் தாண்டவம் செவ்வனே பயின்றுள அவன் ஆடக் கண்ட பின்னே நான் போக ஆவல் கொண்டிருக்கின்றேன்"

"ஊத்தைவாய் ஓரிக்கிழமே, உன்னையான் வாரன் முறை விதிக்கச் சொல்லவில்லை," என்று தனதாட்களைப் பார்த்து, "எற்றடா இவனை யணியில்" என்றனன் கஜேந்திரவிம்மன்.

"ஆனுல், எனது உயிர்த்தோழன் இந்த நரபாலப் பிரபுவையேனும் முதலில் ஏற்றுங்கள். என் உதவிபெற்றவர் உயர்பதவி அடையக்காணும் உவகையாவது எனதாகட்டும்.—ஹி! ஹி!"

" நன்று" எனக் கஜேந்திரஸிம்மன் நரபாலன் இருந்த பக்கந் திரும்பி, "நின் நண்பன் கண்களிக்க நீயே ஏறு நரபாலா," என்றனன்.

இதுவரையில் சித்தம் சிதைந்து பேசுவார் வாயெல்லாம் பித்தனெனப் பார்த்திருந்த நரபாலன், "கொற்றவா, அடியேங்கள் செய்த யாவும் மற்றொருவன் ஏவலாலானவை......விராடன் வாளாப்போக எம்மை ஒழுப்பதேன்!" என்று கூறிச் சிறுகடிதத் துண்டை நீட்டினான். கஜேந்திரஸிம்மன் அதனை வாங்கிக்கொண்டு, " அஞ்சேல், ஐய, அவனையும் நின்பின் ஆற்றுப் படுத்துகின்றேன். நீங்கள் முதலில் செல்வதற்குரிய இடம் செல்லுங்கள்," என்று கூறி, ஆட்களைப்பார்த்து, "இழுதைகாள், ஏனின்னுந் தாமதம். நாமிங்கிப்படி வாதாடிக் கொண்டிருக்கையில் கீழ்ச் சென்ற காஷ்மீரன் தீர்ப்புச் சொல்லி விடுவானாயின் நான் தோற்றவனாவேன்." என்று கர்ச்சித்த கர்ச்சனையின் எதிரொலி ஓய்வதனின் முன்னே, பாதகர் இருவோரும் நெடுமரத்திற் பழுத்துத் தூங்கினர்.

மதிலின்மீது தண்டனை இன்னபடி முடிந்திருந்த போது, மண்டபத்தினுள்ளே காஷ்மீரத்தரசன் பொது மனிதர் பதின்மரோடு நெறிவழுவா முறையில் கொலையின் வாய்மையை ஆராய்வதி லமர்ந்திருந்தான். காந்திமதி தான் கண்டதும் கேட்டதும் கரி கூறிக்கொண்டிருந்தனள். அப்பொழுது நியாயம் ஓர்வதற் கமைந்த பொது மனிதர் பதின்மரில் கிழவனொருவன், " பாண்மகள் கூறியதாக இவள் கூறுகின்றாளேயன்றித் தானே நேராக இவள் யாதும் உணர்ந்தவளல்லள். மேலும், இளவரசன் இறந்தானென்பதும் இன்னும் நிச்சய மில்லை. ....ஆதலால் பொதியறையைத் துருவி முதலில் உண்மையைத் தெரிந்துவருவதே தக்கது" என்று சாற்றிவரும் சமயத்தில், கஜேந்திரஸிம்மன் மன்றத்தின் நடுவண் எய்தி, "குற்றவாளிகளைக் கொன்றாகி விட்டது" என, நீதித்தலைவனாயிருந்த காஷ்மீர வேந்தன், "ஆயின், மேலினி ஆராய்தல் மிகை......... சான்றுகளைக் கேட்டுவந்த பொதுநீதிப் புருடர்காள், உந்தம் கருத்தியாது?.........தூக்கிலே தொங்குகின்றவர் குற்றவாளிகளோ, அல்லரோ?" என்று கேட்டான். அந்தக்காலை, முன்சொன்ன முதியோன்,"கொலை இழைத்த கொடியரே அவர்.........தூக்கிலிட் டாய்விட்டதென்றால் புறச்சான்று வேறொன்றும் வேண்டியதில்லை" என்றான். இவன் குரலின்திட்பம், மீசையுந் தாடியுங் காட்டும் தோற்றத்திற்கு உரிய வயதிற்கு ஏற்ற தன்று.

---

29. பூசையும் பொய்க்கவில்லை.

காந்தாரதேசக் கட்டழகி இடித்துரைக்கத் தன் மனமும் மானமும் நொந்தவனாய்ச் சித்ராங்கன் இயம்பிய மாற்றங்கேட்டுப் பூசைமனை புகுந்த மந்தாகினிக்குக் கோட்டையைச் சேனைகள்சூழ்கின்றவரையில், மாளிகையில் நிகழ்ந்ததொன்றும் தெரிந்ததில்லை. பாங்கி யாவாள் கயற்கண்ணி கொண்டுவரும் பாலும் சில பழமும் அருந்தி அவளுக்கும் ஆறுநாட்கள்கழிய, அந்நாள் மாலையில் போர் முரசொலியோடு படைசூழும் ஆரவாரம் மிகுந்தெழ மனங்கலங்கித் தன்னறைப் பலகணியைச் சிறிதுதிறந்து வெளிப்புறம் நோக்கினாள். மதிலிற்கு அப்பால் பறக்கும் மணிவாளனது பதாகைகள் அவள் கண்களிற்குத் தென்பட்டன. கஜேந்திரஸிம்மன் தன் சைநியத்தைக் கொண்டு கோட்டையின் மறுபுறத்தை வளைந்தானாகையால் தன் தந்தையும் உடன் வந்திருப்பதை மந்தகினி அறிவதற்கியன்றிலது, "என்னே, மணிவாளன் தண்டோடர்க்க வந்திருத்தது," என்று கவற்சியுற்றனள். "என் தந்தைக்கும் அவற்கும் பகையுளதாதலாலோ" என்னும் பயம் மூண்டதெனினும், "மற்று, அதன் பொருட்டொரு மடவாளை மருட்ட இசைவானோ மணிவாளன்" எனச் சிறிது தேறினாள். இவ்வாறவள் தேறுகின்ற அமயத்தில், சித்ராங்க இளவரசன் அவ்வேளை மாளிகையிலிருப்பது நினைவிற்கு வர "ஓகோ, தன் மகளைத் தவிர்த்து என்னைமணந்தானைத் தண்டிக்க வந்துளான் மணிவாளன்" என்று எண்ணுவாளாயினாள். இவ்வெண்ணம் உதித்தவுடன், "என் நிமித்தம் இளவேந்தன் இடுக்கண் அடைவதோ!" என்று ஏங்கினாள். இதற்கிடையில், காஷ்மீர மன்னனது கொடியும் ஒன்றிரண்டு தோன்ற, "அரசன் கொடுத்த வாக்கைப் பிறழ்ந்தது பொறாது, பகைவனுடனும் சேர்ந்து, இந்நாட்டின்மீதே படைஎழுந்து வந்திருக்கின்றான்போலும் மணிவாளன்-விச்வகேசரியைவென்றபின் இளவரசனையும் வாளுக் கிரையாக்கத் தேடுகின்றானோ! ஐயகோ, இதற்கெல்லாம் ஆதாரம் நானேயாய் இருக்கின்றேன். ஏழையேன் என் பொருட்டு இந்நாடு துயருழக்க மழமகனும் உயிரிழக்க நேர்வதும் நீதியோ—எந்தையார் என்குற்றனர்? வந்தே அவர் அமர்செய்தாலும் அந்தத்தில் முடியும்வகை யார் அறிவார்." என்ன இன்னபல நினைத்துத் துயர் மேலிட இத்தீங்குகளைத் தடுப்பதற்கு யாது விதம் என்று மந்தாகினி சிந்திக்கப் புகுந்தாள். "கணவனார் காதலெல்லாம் கட்டுண்டிருப்பது மாலினியின்மாடே—என் காதலோ அவரிடம்—மற்று மாலினியின் அன்பே அண்ணலுக்கு இன்பம் நல்குகின்றது...... கொழுநனது இன்பம் வளரும்வகை நாடுபவளே மனைவி; என்னுடைய இன்பம் கருதி அவரைக் காதலிப்பேனாயின் காதலியாகேன் — சுயநயப் பாதகியே! என் வாழ்விற் கொருபொருள் இனி எங்குளது! உயிருடன் அவற்கு ஊழியஞ் செய்யத்தான் பாக்கியம் பெற்றிலேன் . ...மற்று........' என்று யாதோ வோர் கருமஞ் செய்யக் கருத்துள்கொண்டு முன்னிருந்த மலைமகளைக் கைதொழுதனளாய்த் "தாயே, தனிமுதலொரு தேவி, தமியேன் பூசைகள் புரிவதற்குப் பூவால் புனைந்திடும் வகை காணேன். இமயத் தரையனின் அருமைமிகு பாவாய்,நினதிரு திருவடியிற்பரிந்தே நல்குவென்முன்னை வினைத் தீயேன் எனதுயிர், சித்ராங்கனுயிரிற் கீடென ஏற்றருள்வாய்" என வேண்டி நயனத்திதழ் முகிழ்த்துச் சிறிது நேரம் நின்றாள். நின்றவள் மீண்டும் மெல்லெனமெல்லென உயிர்த்து, " மறலியுடன் மன்றாடிக் காதலனை மீட்டிவர வல்லே னல்லேன். விறலியெனப் பாத்தைமனை மீதேந்திச் சுமந்துசெல்ல வல்லே னல்லேன். கறைமிடற்றுக் கங்கைமுடிக் கண்ணுதலின் பங்குவளர் உமையே உன்முன் இறைஞ்சிநின்றும் நானொருத்தி ஆளாவதெப்படியோ அறிகிலேனே!" என்று ஏங்கிப் புலம்புவாளாயினாள்.

மந்தாகினியின் நிலைமை இவ்வாறாக, மதிற்புறம் படைசூழ இனிப் பிழைத்த லரிதென்றோர்ந்த நரபாலனும் தாமோதரனும், தாமோ சாகப் பழியேனும் தீரட்டுமெனும் கொடுமை யொருபாலும், இவனிறந்தால் பின்னின்ற சான்றில்லை எனும் சூழ்ச்சி ஒருபாலும் தூண்டி வைக்கப், பாபத்தின் உருவம்போல்வான் கொலையிற் கொடிய மகோதரனை விளித்து, நிலத்தறைபுகுந்து சித்ராங்கனைக் கொன்றுமீள அனுப்பினர்.

மகோதரன் எப்பொழுதும் போலவே அப்பொழுதும் மதுவுண் டிருந்தான். ஆகையால் பிலவாயிற் புகும்போது அங்குப் பதுங்கியிருந்த மாதவியின் நாயினுருவத்தைக் கண்ணுறாமலே அவன் கதவைத் திறந்து சித்ராங்கன் சிறையிருந்த இருட்டறையுள் நுழையலாயிற்று. மேலும், இளவரசன் உணவின்றி ஒடுங்கிக் கிடப்பான் என்று மதித்தமையால் மகோதரன் கத்தி கோடரி முதலிய யாவுமின்றி வெறுங்கையுடன் சாவகாசமாய் உள்நுழைய, அங்குக் கதவுதிறக்கு மொலிகேட்ட சித்ராங்கன் மெல்ல எழுந்தோர் மூலையிலொதுங்கி நிற்கக் குடிவெறி தலைக்கேறிய கொலையாளி இளவரசன் நீத்தகன்ற தலையணையைப் பிசைந்தமுக்கிக் கொண்டிருந்தான். வாய்த்த சமயம் இதுவேயென்று வெளியேறச் சித்ராங்கன் எத்தனிக்கையில், அதுவறிந்த மகோதரன் பின்தொடரப்புகுந்திட அந்நாய் ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவன் கழுத்தைக் கௌவிக் கொண்டது. அப்பேய்மகனும் சிறிது போது உயிரிற்கு மன்றாடிப் பிறகு பைரவ சுவர்க்கம் சென்றடைந்தான். ஆனால் நாயுடன் கயவன் போராடிய செவ்வி நோக்கிச் சித்ராங்கன் வெளியிற் குதித்துக் கதவை இழுத்து மூடிக்கொண்டு ஓடிப்போயினன்.

ஓடிய இளவரசன் நரபாலனும் அவனது ஆட்களுந் தன்னைக் காணுவண்ணம் ஒளிந்துகொள்ள நினைத்தனன். தன்னுடைய மாளிகையின் சிறப்புச் சூழ்ச்சியெல்லாம் அறிந்த அவனுக்கிது அரியதுமன்று. அம்மனையின் நடுவில் இருந்த மறையறையொன்றிற் கேகும் அந்தரங்க வழிநாடி நடந்தான். அச்சமயந்தான் நரபாலன் காந்திமதியைக் கோபுரத்தின்மீ தழைத்துச்சென்று உயிரை நச்சி வாய்மையைத் துறக்கத் தூண்டிய சமயம்.

நாடிய அறையின் அருகுசென்று சித்ராங்கன் சூத்திரத்தை அழுத்தவும் சுவரே வழிவிட உள்நுழைந்து, ஸாவித்ரியையும் நளாயினியையும் எண்ணி நாணமேற்கொண்டாளாய்க் கற்பே கடுந்தவம் புரிவதுபோல் நின்ற மாதினைத் தன் கண்முன் கண்டான். கண்டதும் அவன் மனைவியவளென்று அறியான்; தன்னுடலில் உண்டாகிய கிளர்ச்சிக்குக் காரணமு மறியான். அடிபடார்ந்த அரவங் கேட்டுக் கண்மலர்ந்த மந்தாகினி பலநாள் புரிந்த பூசையின் பலனாய்த் தேவியின் சிலையருகு நிற்கும் சித்ராங்கனைத் தரிசித்தாள். தரிசித்த கண்கள் தழாது தரையைத் தழுவி நோக்கின. நோக்கிய வாங்கே குழைதடவும் அவள் நயனக்கடை கோமகனின் பார்வையைத் தீண்டியது. அன்னான் முகத்தில் வெறுப்புக் குறியொன்றுந் தோன்றாதது கண்டு தன்னை யாவளென அவன் ஓர்ந்திலனென்பது தேர்ந்தாள்.

மந்தாகினியனைய முகம் படைத்த மாதர்பால் பேய்க்கும் பொருந்தா நசை புகுந்திடாது. வெள்ளம்போல் ஒருவழி ஓடா உள்ளத்தினர் மகளிர், எனும் எண்ணத்தில் உழன்றிருந்த இளவரசன் இன்று இவள்முன் நிற்கவும் நாணி, "அணங்கே, உயிர்ப்பயம் உந்த இவ்விடம் ஒளியவந்தேன். பயிர்ப்பில் மிக்க நீ, நின்மாடம் யான் புகுந்தது பொறுப்பாய். மற்று, இம்மாளிகை எனதேயாகையால், யானறியாது இங்குத் தங்கியவன் யாவளெனக் கேட்கும் உரிமை எனக்குளது. மறுக்காது மொழிவாயோ?" என்றனன்.

" அரசே, நின்னின்னுயிர்க்குற்ற பயத்திற்குக் காரணமாயவள், யான்," என்று யாழோ இசைத்ததென மிழற்றினாள் மந்தாகினி.

"மற்று, நங்காய், நீ நரபாலனின் கூலிக்குக் காத்திருப்பவளோ! இந்த இரண்டகர் செய்யும் சதியிற் சேர்ந்துளாயோ, நீயும்! அமையாது அமையாது. அவ்வாறமையினும் நீயே கொல் என்னை. அம்மகோதரன் வேண்டா. நின்கை இறத்தல் என்னை நாகருலகிற் சேர்க்கும்" என்று இம்மையிலன்றி மறுமைக்கும் அழகியர் உறவு தேடுவான்போல் சித்ராங்கன் சொன்னான்.

T. N. சேஷாசலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[609-ம் பக்கத் தொடர்ச்சி.]

கண்ணப்ப னேப்பதோ ரன்பின்மை

இதற்கினி என்கண் அம்பால்
இடந்தப்பின் எந்தை யார்கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர்
நிற்கவும் அடுக்கும் என்று
மதர்த்தெழும் உள்ளத் தோடு
மகிழ்ந்துமுன் இருந்து தங்கண்
முதற்சரம் மடுத்து வாங்கி
முதல்வர்தம் கண்ணில் அப்ப

நின்றசெங் குருதி கண்டார்
நிலத்தினின் றேறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்த தோள்கள்
கொட்டினார் கூத்தும் ஆடி
நன்றுநான் செய்த இந்த
மதியென நகையும் தோன்ற
ஒன்றிய களிப்பி னாலே
உன்மத்தர் போல மிக்கார்.

ஆ. ஈதென்ன! கடவுளது மற்றொரு கண்ணிலிருந்தும் குருதி பொங்கி வழிகின்றது காண்கின்றார் கண்ணப்பர். ஐயையோ என அலறுகின்றார். பின்னர் ஒருவாறு தேறி "மருந்துதான் அறிந்தேனே. இனி அஞ்சுவதேதற்கு. இன்னும் ஒருகண் எனக்கு உள்ளவரை இறைவனுக்கு என்ன குறை' என்று களிக்கின்றார். அம்பினை எடுத்து அன்போடு கண்ணை அகழ ஊன்றுகின்றார். கடவுளுக்கும் இதைக் காணப் பொறுக்கவில்லை. ஊன்ற அழுத்திய கையை ஊன்றாவண்ணம் தடுத்துக் கெட்டியாகப் பிடிக்கின்றார் பெருமானார். "நில்லு கண்ணப்ப", "நில்லு கண்ணப்ப", "நில்லு கண்ணப்ப" என்று ஒருமுறைக்கு மும்முறை கூவுகிறார். பரபரப்பில் எங்கே கேளாமல் இருந்து விடுவாரோ என்று அவரே அஞ்சுகிறார் போலும்.

வலத்திருக் கண்ணிற் றங்கண்
அப்பிய வள்ள லார்தம்
நலத்தினைப் பின்னும் காட்ட
நாயனார் மற்றைக் கண்ணில்
உலப்பில்செங் குருதி பாயக்
கண்டனர் உலகில் வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து
தொன்மையின் உம்பர் மேலார்

கண்டபின் கெட்டேன் எங்கள்
காளத்தி யார்கண் ஒன்று
புண்டரு குருதி நிற்க
மற்றைக்கண் குருதி பொங்கி
மண்டுமற் றிதனுக் கஞ்சேன்
மருந்துகை கண்டேன் இன்னும்

உண்டொரு கண்இக் கண்ணை
இடந்தப்பி ஒழிப்பேன் என்று

கண்ணுதல் கண்ணில் தங்கண்
இடந்தப்பிற் காணும் நேர்பா
டெண்ணுவார் தம்பி ரான்தன்
திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி
உண்ணிறை விருப்பி னோடும்
ஒருதனிப் பகழி கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத்
தரித்திலர் தேவ தேவர்

செங்கண்வெள் விடையின் பாகர்
திண்ணனார் தம்மை ஆண்ட
அங்கணர் திருக்கா ளத்தி
அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்கும் கையைத்
தடுக்குமூன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக்
கண்ணப்ப நிற்கஎன்ற

அந்நிலையைக்காண ஆண்டவனும் அறிவாளருமே அருகராவார்.

கானவர் பெருமா னார்தங்
கண்ணிடந் தப்பும் போதும்
ஊனமு துகந்த ஐயர்
உற்றுமுன் பிடிக்கும் போது
ஞானமா முனிவர் கண்டார்
நான்முகன் முதலா யுள்ள
வானவர் வளர்பூ மாரி
பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப.

அவர் இயற்கையே இவரும் கொண்டது என்றபடி நொந்தபடியே இவரும் நொந்தார். அவர் கண்ணிழக்க இவரும் கண்ணிழந்தார். ஆனால் அவரது கண்ணில் குருதி வந்தபோதே இவர் கண்ணில் ஏன் குருதி வடியவில்லை? கடவுளது கண்ணில் புண்ணீர் வடிந்தது வெறும் தோற்றம் தானே. ஈதெல்லாம் ஓர் திருவிளையாட்டுத்தானே. மற்றைப்படி உள்ளூற நின்றநிலையில் இருவரும் ஒருவரே யாயினர். ஆகவே கண்ணப்பரும்கடவுளும் ஒன்றாகி நின்றமை இக்கதையில் நன்கு விளங்குகின்றது. கடவுளது கண்ணுனது கெடவே கண்ணப்பர் தமது கண்ணை அகழ்கின்றார். அதுவும் எவ்வாறு அகிழ்கின்றார்? "மதர்த்தெழும் உள்ளத்தோடு மகிழ்ந்து" உண்ணிறை விருப்பினோடே அகழ்கின்றார். துன்பமும் இன்பமாதற்கு இதனினும் வேறு எடுத்துக்காட்டு எதற்கு?

கடவுளும் கண்ணப்பரோடு ஒன்றுகூடி யிருப்பதை விரும்பினார். பிரிவுகனி இரங்கினார். கண்ணப்பர் நோகத் தாமும் நொந்தார். "பகழிகொண்டு திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவதேவர்" என்று கடவுள் திடுக்கிட்டதைச் சொல்லின் ஒலியாலேயே பொருள் விளங்கக் கூறியுள்ளார் சேக்கிழார். பின்னரும், சிவபெருமான் கண்ணப்பரைப் பிரியமாட்டாது எப்போதும் தன் பக்கத்திலேயே அமர்த்திக் கொண்டார் அல்லவா?

பேறினி இதன்மேல் உண்டோ
பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண்
இடந்தப்ப உதவும் கையை
ஏறுயர்த் தவர்தங் கையாற்
பிடித்துக்கொண் டென்வ லத்தின்
மாறிலாய் நிற்க என்று
மன்னுபேர் அருள்பு ரிந்தார்.

காதலன் காதலி என்ற அவர்க ளிடையுள்ள அன்பிற்கும் கண்ணப்பர் கடவுள் என்ற இவர்களிடைக் கண்ட அன்பிற்கும் உள்ள வேற்றுமை என்ன? அக்காதலாவது சிலரால் பழிக்கப்படுவது. இவ்வன்பாவது எல்லாராலும் போற்றப்படுவது. அன்பின் உயிர் நிலையையும் உயர் நிலையையும் இங்கேதான் காணலாம். கண்ணப்பர் காட்டிய தலைசிறந்த அன்பினைப் போல வேறெங்கும் கண்டதும் இல்லை, கேட்டதும்இல்லை. கனவிலும் காண இயலாது, கேட்க இயலாது. இவ்வன்பினைச் சேக்கிழார் தெளிவாக விரித் துரைத்ததுபோல வேறெவரும் உரைத்ததில்லை. உரைக்கப் போவதும் இல்லை.

கண்ணப்பர் எதுவேண்டிக் கடவுளைத் தொழுதார்? இரும்பு காந்தத்திற் போய்ப் பதிகின்றபோது எதை வேண்டிப் போய்ப் பதிகின்றது. ஒன்றினையும் வேண்டியல்லவே. காந்தத்தின் எதிரே இரும்பு பிரிந்து இருக்க முடியாது. அதேபோலக் கண்ணப்பரும் கடவுள் எதிரே அவரை விட்டுப் பிரிந்திருக்க முடியாது. அவ்வளவேயன்றி அவாவினாலேயோ அறிவாராய்ச்சியினாலேயோ அன்பராயினார் அல்லர். கடவுள் தம்மைப் படைப்பவர் காப்பவர் அழிப்பவர் என்று ஓதியுணர்ந்தாரா? அவர்இன்பம் தருபவர் என்று கேள்வி அயலாரால்அறிந்தாரா? ஒன்றுமேஇல்லை. இயற்கையில் இருவரும் இணைந்திருந்தனர். கண்டதும் பழைய பொருத்தம் மறுபடியும் இருவரையும் ஒருவராக்கியது. கடவுளது கண்ணில் புண்ணீர் ஒழுகிய போது இவரால் பொறுக்க முடியவில்லை. கண்ணைப் பிடுங்கியபின்தான் கண்ணெரிச்சல் அடங்கியதெனலாம். ஒருவகையால் நோக்குமிடத்து இது ஓர் அருமையல்ல. தினவெடுத்தால் சொரிந்துகொள்ளுவோரைப் புகழ்வார் யார்? கண்ணெரிச்சல் நீங்கக்கண்ணைப் பிடுங்குவாரை ஏன் புகழவேண்டும். ஆனால் கடவுள் கண்ணெரிய இவரது கண்ணெரிந்ததுதான் இதிலுள்ள உயர்வு. இவர் கண்ணை அப்ப அவர் கண்நோய் நீங்குதல்தான் இதிலுள்ள சிறப்பு. குறத்தி பிள்ளை பெற்றால் குறவன் காயம் தின்ற கதையோ இஃதெனச்சிலர் நகைக்கலாம். ஆனால் அந்தக் குறவழக்கும் அன்பின் உயர் நிலையைக் குறிக்கின்றதென உணர்ந்து நகைப்போர் உய்ந்து போவார்களாக.

கண்ணைப் பிடுங்குவதில் ஒன்றும் பெருமையில்லை. கண்ணனைப்பவர் ஒருவர்தான் தம் கண்ணை அகழ்ந்தெடுத்தவர் என்பது உண்மையல்ல. மற்றையோரும் கண்ணைப் பிடுங்கிக் கொண்டதாகக் கதையில் படிக்கின்றோம். ஆனால் அந்நிகழ்ச்சிகள் எல்லாம் உண்மை அன்பினால் நடந்தவை அல்ல. கண்ணபிரான் என்றபெரியார் சிவனை வழிபட்டார் எனச் சில நூல்கள் கூறுகின்றன. அப்பெரியார் திருமால்தானோ வேறெவரோ யாம் அறியோம். கொடியவன் ஒருவனைக் கொல்வதற்காகத் திருவாழி ஒன்று கொடுத்தருள வேண்டுமென நாள்தோறும் செந்தாமரை மலர்கள் ஓராயிரம் கொண்டு சிவபெருமானைப் போற்றி, வழிபாடியற்றி நோன்பு நோற்று வந்தார். ஒருநாள் கடவுளானவர் அப்பெரியாரது உள்ளத்துறுதியை அளந்தறிய வேண்டி அவர் எண்ணி எண்ணிக் கொண்டு வந்த ஆயிரமலரில் ஒன்றினை மறைந்துபோகச் செய்தார். கண்ணபிரானும் பெருமானின் பேராயிரம் பாவிப் போற்றும்போது ஓராயிரமலரில் ஒருமலர் குறையக்கண்டார். தயங்காது நின்று சொந்தாமலரைப் பழித்துச் சிவந்த தமது திருக்கண் மலர்ஒன்றைப் பறித்தெடுத்தச் சிவபெருமான் திருவடியிற் சாத்தினார். இறைவனிடத்தே அப்பெரியார் கொண்ட உள்ளத்துறுதி ஒப்புயர் வற்றதேயாகும். ஆனால் எது வேண்டித் தமது கண்ணையும் கொடுத்தார். திருவாழி ஒன்று பெறவேண்டியல்லவா? எந்தத் திருவாழி வேண்டுமென்றார் கண்ணப்பக்கடவுள்! ஏதேனும் தருவார்என்று கண்ணப்பர் ஆண்டவனை வழிபட்டுக் கண்ணைப் பிடுங்கி

அப்பினார். அல்லவே. ஒன்றையும் வேண்டாதே அன்றோ செய்தார். அன்புகொண்டார் அவ்வாறு கண்ணைப் பிடுங்கிக் கொள்ளாமல் அந்நிலையில் இருக்க முடியாது.

'அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்'

ஆனால் கண்ணினை அன்பால் கொடுப்பார் ஒருவரே. அவாவாற் கொடுப்பாரோ பலர். கண்ணொன்றையா, உடலை எல்லாம்கூட ஒன்றைவேண்டிக் கொடுத்து விடுவாரும் உளர்? விக்ரமாதித்தனை ஒருபெண்மணி விரும்பி அவனை அடையவேண்டி நோன்பு நோற்றுத் தன்னையே காளியம்மைக்குப் பலியாகக் கொடுத்து வெட்டுண்டு கிடந்தாளாம். ஏன். விக்கிரமாதித்தனை அடையவேயன்றோ? எந்த விக்கிரமாதித்தனை அடைய எண்ணினார் நமது கண்ணப்பர்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு,

என்பதற்குத் தன்னலம் சிறிதும் இன்றிப் பிறர்க்கே உரியராதல் வேண்டும் என ஓர்ஏகாரம் தந்து பொருள்கொள்ளுதல் வேண்டும். அல்லாக்கால் அன்பிற்கும் அவாவிற்கும் வேற்றுமை அறிய இயலாது. சூரபன்மன் உலகை எல்லாம் ஒருகுடைக்கீழ் ஆளவேண்டுமெனும் பேராவாக் கொண்டு பெருவேள்வி ஒன்று வேட்டான். தனது தசையையே அவியாகவும் குருதியே நெய்யாகவும் கொண்டு கடும்வேள்வி செய்தான். பின்னர்த்தன்னையே நிறையவியாக இட்டு வேள்வியில் குதித்து நெருப்பிற் கிரையாகிச் சாம்பராயினான்.

வான கத்திடை நிற்புறு சூரபன் மாவாந்
தான வர்க்கிறை வாள்கொடே யீர்ந்துதன் மெய்யி
னூனத் தையுமங்கிமே லவிஎன ஓச்சித் [தான்
சோனை ஒத்ததன் குருதியை இழுதெனச் சொரிந்
கடிதி னுச்சிநின் றுருவியே வச்சிர கம்பத்
தடித லிற்சென்று சூரபன் மாவெனு மவுணன்
படிவ முற்றுநுண் டுகளுற உளம்பதை பதைத்து
முடிய மற்றது கண்டனன் மடங்கல்மா முகத்தோன்

ஆனால் இக்கடுந்தவம் எல்லாம் எதற்காக? எல்லோரையும் தன்னடியில் வைத்து அழுத்திப் பிழிந்து அடிமையாக்கவே அன்றோ? அதனாலல்லவா உள்ளம் பதைபதைத்து முடிந்தான் சூரன். ஒன்றும் வேண்டாத கண்ணப்பரோ கண்ணைப் பிடுங்கும்போதும் களிப்பின் மிகுதியினால் கூத்தாடினார். சூரனும் கடவுளைப்பின்னர்க் கண்டானும். கண்ணப்பரும் கடவுளைக் கண்டார். ஆனால் அவன் கண்ட வகைவேறு. இவர்கண்ட வகைவேறு. அவன் வேண்டியதைத் தந்தருளும் கொடையாளியைக் கண்டான். இவரோ இன்ப உருவாகிய கடவுளே தாமாகிக் கடவுளைக் கண்டுணர்ந்தார். அன்பினால்தான் அக்கடவுளது உண்மை உருவை உணர்ந்துகொள்ள இயலும். மற்றைப்படி உடலை என்னதான் வெட்டிவெட்டி வேள்விசெய்தாலும் பயனில்லை. வேறு வேறான பொய்த்தோற்றங்களைக் காணலாம். நமது எண்ணத்திற்கும் அவாவிற்கும் அடிமையாகலாம். இன்பமடைந்து இறைவனது உண்மை உருவை அறிய இயலாது.

என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுக்கினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே

என்பதன்றோ திருமந்திரமும்.

கன்னன் தன்னுயிரைக் காத்துநின்ற அறத்தினை இரந்து பெற்றுப்போக வஞ்சனையாகவந்த கண்ணனுக்கு

ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்
ஒவிலா தியான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்கநீ உனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றால்
புண்ணியம் இதனினும் பெரிதோ.

என்று சொல்லி அவ்வறத்தையும் கொடுத்தருளினான். பின் அதன்பயனாய் வலிகுன்றி உயிர்விட்டான். ஆனால் கன்னன் ஏன் இவ்வாறு செய்தான். 'ஈக என வந்தார்க்கு இல்லை என்பதில்லை எனும் ஒழுக்கத்தை மேற்கொண்டவனாதலினால், அந்நோன்பு தவறாதபடி தன் புகழை நிறுத்த அங்ஙனம் உயிரையும் புறக்கணித்து அறத்தையும் அறமாகக் கொடுத்தருளினான். ஆனால் கண்ணப்பர் கொண்ட கொள்கை என்ன? அவர் வேண்டிய புகழ் என்ன? அன்பேயன்றி உலகில் அவர் அறிந்ததொன்று வேறுள்ளதோ?

இனிக் காந்தாரி என்ற அம்மையார் திரிதாராட்டிரன் என்னும் குருட்டரசரின் மனைவியார். கற்பினைப் பெருநோன்பாகக்கொண்டவர். தமதுகாதலன் பிறவிக்குருடர் என அறிந்தார். இதுவும் தமது தலைஎழுத் தென்று மகிழ்ந்தனர். தமது காதலர் கண்ணால் பொருள்களைக் கண்டு மகிழாதபோது தாமும் கண்ணால் ஒன்றையும் காணலாகாதென முடிவு செய்துகொண்டனர். கண்ணைக் கட்டிக்கொண்டு காலத்தைப் போக்கினாராம்.

"இமைத்த கண்ணிணை மலர்ந்தினி நோக்கிலேன்
யாரொருவரை என்று
சமைத்த பட்டமொன் றினிற்பொதி பெதும்பை"

என்பார் வில்லிபுத்தூரார். இவ்வம்மையாரின் கற்புநிலை மிகமிக உயர்ந்ததேயாகும். ஆனால் அதுவும் அன்புநிலையாகாது. கண்ணப்பருக்கு கடவுளானவர் கைப்பிடி மணமகன் அல்ல. கண்ணப்பர் கற்புநோன்பு நோற்பவரும் அல்லர். ஒருவகையில் நோக்குமிடத்துக் களவொழுக்கமாகக் கடவுளைத் தாமே கண்டு கண்டதும் காதல் கொண்டவர். கடவுள் கண் கெட்டதென்று தன் கண்ணைக்கட்டிக் கொண்டவர் அல்லர். தம் கண்ணும் கெட்டுநின்றார். கடவுளின் கண்கள் நல்லனவாயபோது பெரியதோர் இன்பம் பெற்றார். கண்கட்டிக் கொண்ட காந்தாரியோ உலகப்பொருளை அறியாது குறையுடையவராயினார். கண்ணப்பரோ கண்கெட்டதனால் எல்லாவற்றையும் அறிந்த கடவுளே யாயினார்.

இனித் திருக்குறிப்புத் தொண்டர் முதலாயினோரும் அன்பர்களே. கல்லிலே தலையைமோதிக்கொண்டு இறக்கத்துணிந்தனர் திருக்குறிப்புத்தொண்டர். இன்னும் இவ்வாறு பலவகையாக மாளத் துணிந்தனர் மற்றையோர். ஆனால் அவர்களது அன்பு கைக்கிளை அன்பாகுமே அன்றி ஐந்திணை அன்பாகாது. கைக்கிளையாவது ஒருதலைக் காமம். ஒருவர் அன்பு பாராட்டுவதுபோல மற்றொருவரும் அன்பு பாராட்டாதபோது கைக்கிளை என்கின்றோம். ஓர் அழகிய இளஞ்சிறுமியைக் கண்டு ஓராண்மகன் காதலித்தால் அக்காதலை அச்சிறுமி எங்ஙனம் அறிவாள். இதுதான் கைக்கிளை அன்பு. அதுபோலவே ஒருவன் ஒருத்தி மேல் உயிராக் இருக்க அவள் அவனை எண்ணுதும் ஏறெடுத்துப் பாராதும் இருப்பாளானால் அங்கும் கைக்கிளையைத்தான் காண்கின்றோம். அவனும் அவளைத்தான் அடையாவிட்டால் உயிர்விடுவதாகத் துணிந்து மடலூர்ந்து உயிர்விடுவான். கலக்கம்என வழங்கப்படும் இவ்வொழுக்கமும் கைக்கிளையின்பாற்படும். இதில் ஒருதலையில் தான் உயர்ந்த அன்புநிலை உள்ளது, மற்றைத்தலையில் அங்

ஙனம் இல்லை. திருக்குறிப்புத் தொண்டர் முதலாயினோர் மடலூர்ந்தாரைப்போலக் கடவுளிடத்தே காதல்கொண்டு கல்லில் தலையை மோதிக்கொள்கின்றனர். அவை நடுங்க நாட்டம் கூறும் இடம். ஆனால் கண்ணப்பரோ ஐந்திணை அன்பின் வடிவாயினவர். இங்கு இருதலையும் அன்பு ஒத்துநின்றது. மற்றவர் இடத்துள்ள அன்பினை ஆராய்ந்ததுபோல இவரிடத்தும் இறைவன் ஆராயத் தொடங்கினார். ஆனால் இடையிலேயே கலங்கி விட்டார் கடவுள். "தரித்திலர் தேவதேவர்! என்றார் சேக்கிழார். அம்மட்டோ. அவரைப் பிரியமாட்டாது தமது பக்கத்திலேயே அன்றே இருத்திக்கொண்டார்.

மற்றையோர்எல்லாம் அவாநெறியில் நின்றார்கள். கண்ணப்பரோ அன்பு நெறியில் நின்றார். ஒன்றும் வேண்டாத உயர்நிலை இவருக்கன்றி வேறு யாருக்குண்டு. உலகையும் உடலையும் உதறித்தள்ளிய காரைக்காலம்மையாரும் அன்பு வேண்டும் என்றார். அன்பே உருவாய இவர் எதனை வேண்டுவர். இவரும் மற்றவர்களைப்போலவே வழிபாடியற்றினார்; அமுதூட்டினார் நீராட்டினார்; பூச்சூட்டினார். யாதேனும் ஒன்றை வேண்டுவோரும் இவ்வாறு தானே தொழுதுவருகின்றனர். இறவாமை வேண்டிலர்; மறவாமை வேண்டிலர்; இன்ப அன்பும் வேண்டிலர். இவ்வாறிருந்ததால் அல்லவா இவர்வழிபாட்டிற் கிரங்கித் திருவருள் செய்தார் சிவபெருமானும். ஆகவே நாமும் மணிவாசகரோடு,

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீர் அடி வாய்க்கலசம் ஊன் அமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ.

என்ற இன்பப் பாடல்பாடித் திருத்தோணோக்க மாடுவோமாக.

காதலன் காதலி கதையாக இருந்த அன்பின் கதையைக் கடவுட் கதையாக மாற்றிய சிறப்புச் சேக்கிழாருக்குண்டு. இவர் இங்குக் கூறியதனையும் அக ஒழுக்கம் என வழங்கலாம். நச்சினார்க்கினியர் "ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வாலே நுகர்ந்து இன்ப முறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார்" என்று அகத்திற்குப் பொருள் கூறுவார். இதனுள் ஒருவனும் ஒருத்தியும் என்பதற்குப் பதிலாகக் கண்ணப்பரும் கடவுளும் என வைத்துப் படிப்போமானால் நம் கதையின் உயர் நிலையை அவ்வுரைப்பகுதி நன்கு விளக்கும். "பிறர்க்குக் கூறப்படாது உள்ளத் துணர்வாலே நுகர்தல்" தானே அகவொழுக்கத்தின் சிறப்பியல்பு. அதனால் தானே அதனைப் புறமெனாது அகமென்றது. கண்ணப்பரது ஒழுக்கமும் அவ்வாறே அகமாக உள்ளதென்பதை நாம் கூறவேண்டுமா. திருக்களிற்றுப்படியார்

கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை என்றமையால்
கண்ணப்பன் ஒப்பதோர் அன்பதனைக்—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தியார் அறிதல் அல்லதுமற்
றாரறியும் அன்பன் றது.

என்று கூறுகின்றமை காண்க. ஆகவே நம் கதையையும் அகப்பொருள் பற்றியது எனக் கூறத்தடையில்லை. இறையனார் அகப்பொருளுக்கு இறைவனே உடன்பட்டு பேச்சற்ற பெருநிலையில் நின்று மயிர்சிலிர்த்துக் கண்ணீர் அரும்பிக் களிப்புறுமாறு நக்கீரர் அருளிய உயரிய உரையின் உட்கோளுக்கிணங்க நமதுசேக்கிழார் பெருமானார், "கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை" என்று மணிவாசகப் பெருமானார் திருவாய்மலர்ந்தருளியதன் உண்மைப்பொருளை கண்டுணர்ந்து, அப்பொய்யாக்கதையின் உண்மை நிலையினை உள்ளக் கண்ணால் உள்ளபடி கண்டு உலகம் உய்ய ஒரு பெருங்கதையாகப் பாடியருளினார். மறை ஒழுக்கமாகிய இவ்வக வொழுக்கத்தைத் தெய்விகத் திருவொழுக்க மாக்கியருளி, எம்போன்ற எளியரும் அதனை அறிந்தின்பம் அடையுமாறு பெருங்கதை பாடிப் பேருதவிசெய்த சேக்கிழார் பெருமானின் தெய்வப் புலமையை என்ன என்று புகழ்வோம். தெய்வத் திருவருள் இருந்தவாறு என்னே என்னே !

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

தமிழ்ப் பாடம் 32.

நள வெண்பா

(611-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

நளனும் தமயந்தியும் தம்மக்களோடு இனிது வாழ்ந்துவருங் காலத்தில், இவ்விருவரையும் பிரித்துவைத்து நளனுக்குக் கீழ்மை கொடுக்கப் பன்னிரண்டு வருடம் காத்திருந்தான் கலி. நளனிடத்தில் குற்றம் ஒன்றும் காணாததால் கலியினால் அவனைப்போய் அடைய இயலவில்லை. இப்படியிருக்கச் சந்தியாவந்தனம் செய்வதற்குக் கால் கழுவிய நளன் ஒருநாள் அழுக்குச் சிறிது நீங்காமல் வந்ததை நிமித்தமாக வைத்துக்கொண்டு கலியும் அவனைப் பற்றினான். இதனைப் பின்வரும் மூன்றுசெய்யுள்கள் கூறுகின்றன.

ஆண்டிரண்டா றெல்லை யுளவுந் திரிந்தேயுங்
காண்டகைய வெங்கலியுங் காண்கிலா-னீண்டபுகழ்ச்
செந்நெறியாற் பார்காத்த செங்கோ னிலவேந்தன்
தன்னெறியால் வேறோர் தவறு. 29.

சந்திசெயத் தாள்விளக்கத் தாளின் மறுத்தான்கண்டு
புந்தி மகிழப் புகுந்தகலி—சிந்தையெலாந்
தன்வயமே யாக்கித் தமைய னுடனிருந்தான்
பொன்னசல மார்பற் புகைந்து. 30.

நாரா யணாய நமவென் றவனடியிற்
சேராரை வெந்துயரஞ் சேர்ந்தாற்போற்—பாராளுங்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மை
கற்றவனைச் சேர்ந்தான் கலி. [நெறி 31.

நாராயணாய நம: - நாராயணனுக்கு நமஸ்காரம்
என்று - என்று
அவன் - அந்நாராயணனின்
அடியில் - பாதங்களில்
சேராரை - சேராதவரை
வெம் - கொடிய
துயரம் - துன்பம்

சேர்ந்தால்போல் - பற்றிக்கொள்வதுபோல்,
பார் - பூமியை
ஆளும் - ஆள்கின்ற
கொற்றவனை - அரசனை,
பார்மடந்தை - பூமிதேவிக்கு நிகரான தமயந்திக்கு
கோமானை - நாயகனை,
வாய்மை - சத்தியமாகிய
நெறி - மார்க்கத்தை
கற்றவனை - அறிந்தவனை
கலி - கலியானவன்
சேர்ந்தான் - அடைந்தான்.

விரிவுரை:—பிறவித்துன்பம் பற்றும விருப்பதற்கு நாராயணனுடைய பாதங்கள்தாம் தஞ்சமென வாழ்வதே வழி. அப்படித் தஞ்சமெனச் சேராதவரை துயரம் எவ்வளவு நிச்சயமாகப் பற்றுமோ அவ்வளவு நிச்சயமாகக் கலியும் நளனைப்பற்றினான் என்பது இச்செய்யுளால் கவி எடுத்துக் காட்டுகின்ற கருத்து. இந்த நிச்சயத்தைத் தவிர உவமைக்கும் பொருளிற்கும் வேறு சம்பந்தமில்லை.

குறிப்பு:—சேரார், என்பது எதிர்மறை வினையாலணையும் பெயர்.

கொற்றவன், கோமான், கற்றவன் என்பன மூன்றும் நளனையே குறிக்கின்றன.

இனிவரும் பதினேழு வெண்பாக்களில், கலி புட்கரனை அழைத்துவந்து நளனோடு சூதாடவைத்து, அச்சூதிலே நளன்பால் உள்ள செல்வம் அரசு சைநியம் யாவையும் தோற்பித்து, அவைகளைப் புட்கரனுக்கு வாங்கித் தருவதைப் புகழேந்திப் புலவர் கூறுகின்றார். இப்பாகத்தை நாம் பாடத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை யாகையால் அச்செய்யுள்களைச் சில குறிப்புக்களோடுமாத்திரம் இங்குத் தருகின்றோம்.

நன்னெறியில் சூதா னளனைக் களவியற்றித்
தன்னரசு வாங்கித் தருகின்றேன்—மன்னவனே
போதுவா யென்னுடனே யென்றான் புலைநாருக்
கேதுவாய் நின்றா னெடுத்து. 32.

புன்னை நறுமலரின் பூந்தா திடையொதுங்குங்
கன்னி யிளமேதிக் காற்குளம்பு—பொன்னுரைத்த
கல்லேய்க்கு நாடன் கவறாடப் போயினான்
தொல்லேற்றின் மேலேறிக் கொண்டு. 33.

வெங்கட் சினவிடையின் மேலேறிக் காலேறிக்
கங்கைத் திரைநீர் கரையேறிச்—செங்கதிர்ப்பைம்
பொன்னொழியப் போதும் புறம்பணைசூழ் நன்னாடு
பின்னொழியப் போந்தான் பெயர்ந்து. 34.

அடற்கதிர்வேன் மன்ன னவனேற்றின் முன்போ
யெடுத்தகொடி யென்னகொடி யென்ன—விடற்சூது
வெல்லுங் கொடியென்றான் வெங்கலியா லங்கவன்
செல்லுங் கொடியோன் றெரிந்து. [மேற் 35.

ஏன்றோ மிதுவாயின் மெய்ம்மையே யெம்மோடு
வான்றோய் மடற்றெங்கின் வான்றேற—றூன்றேக்கி
மீதாடி வாளைவயல் வீழ்ந்துழக்கு நன்னாடன்
சூதாட வென்றான் றுணிந்து. 36.

காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதன் மறுத்த லிவைகண்டாய்—போதில்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி. 37.

அறத்தைவேர் கல்லு மருநரகிற் சேர்க்கும் [தையே
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்—மறத்
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்
தீண்டுவரோ வென்றார் தெரிந்து. [கள் 38.

உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து. 39.

ஆயம் பிடித்தாரு மல்லற் பொதுமகளிர்
நேயம் பிடித்தாரு நெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின் வேறல்ல ரென்றுரைப்ப தன்றே
வடித்தாரி னூலோர் வழக்கு. 40.

குறிப்பு:—மாயம்பிடித்தாரின் வேறல்லர், என்பதை மாய்+அம்பு+இடித்தாரின்+வேறு+அல்லர், எனப் பிரித்து "நெஞ்சிலே கொல்கின்ற அம்பு தைத்தவர்களிலும் வேறு அல்லர்" எனப் பொருள் கொள்க. அப்படிக்கின்றி நெஞ்சிடையே, மாயம்+பிடித்தாரின் என்று பிரித்தால் பொருள் சிறக்காததுடன் அந்த மூன்றாவது அடிக்கு மோனையும் இல்லாதுபோம் "பிழைக்கும் மருந்து", "உய்யும் வழி" என்றன போன்ற வழக்குக்களில், பிழைக்கச் செய்கின்ற, உய்விக்கின்ற, என்னும் பொருள் பெறுவதுபோல் 'மாய் அம்பு', என்பதும் மாய்விக்கின்ற அம்பு என அர்த்தமாகும்.

தீது வருக நலம்வருக சிந்தையாற்
சூது பொரவிசைந்து சொல்லினேம்—யாதும்
விலக்கலிர்நீ ரென்றான் வராலேற மேதி
கலக்கலைநீர் நாடன் கனன்று. 41.

நிறையில் கவறாட னீநினைந்தா யாகின்
இறையிற் கதிர்முத்தஞ் சிந்துந்—துறையில்
கருப்பொடியா மள்ளர் கடாவடிக்கு நாடா
பொரும்படியா தென்றானிப் போது. 42.

விட்டொளிர்வில் வீசி விளங்குமணிப் பூணாரம்
ஓட்டினே னுன்பணைய மேதென்ன-மட்டவிழ்தார்
மல்லேற்ற தோளானும் வான்பணைய மாகத்தன்
கொல்லேற்றை வைத்தான் குறித்து. 43.

காரேயுங் கூந்தலாள் கொங்கைமேற் காதலித்த
தாரேயுந் தோளான் றனிமனம்போல்—நேரே
தவறாய்ப் புரண்ட தமையனொடுங் கூடிக்
கவறாய்ப் புரண்டான் கலி. 44.

குறிப்பு:—இச்செய்யுளின் பொருள் சிறிது சந்தேகத்திற் கிடமாயிருக்கின்றது. கலி இருடபமாக உருவெடுத்துப் புட்கரனைத் தாங்கிவந்து சூதாடும்போது தானே அங்குச் சூதாடுங் காய் ஆக மாறினான். அப்படி மாறிய கலி சூதுக்காயாக (கவறாக) உருட்டினோர் உருட்டும் போது புரண்டதைக் கவி இங்குக் கூறுகின்றார். அது வரையில் நிச்சயம். ஆனால் கவறாகக் கலி புரள்வதற்கு மனம் புரள்வது உபமானமாக வந்திருக்கின்றது. யார் மனம்? மேகத்தை ஒத்த கூந்தலையுடையவளுடைய கொங்கையை விரும்பியவனின் மனம். அவன் இங்கு யார்.? நளனாகவேனும் புட்கரனாகவேனும் கலியாகவேனும், இவர் மூவரும் அல்லாத வேறொருவனாகவேனும் இருத்தல் வேண்டும். தோளான், என்பது முன்சொன்ன மூவரையும் அல்லாமல் அயலொருவனைக் குறிப்பதாயின், கூந்தலாள் என்பதும் தமயந்தியைக் குறிக்காமல் பொதுவாக மாதொருத்தியைக் குறித்திடும். ஆயின், பொதுவாக மாதர்பால் காமமுற்ற ஒருவனின் மனம் தன்னிலை தடுமாறிப் புரள்வதுபோல் கலியும் கவறாகப் புரண்டான், என்று எடுத்துக்காட்டுவமையாகக் கொள்ளினும் அமையும்.

மற்றுக் 'கூந்தலாள்' என்பது இங்குத் தமயந்தியேயாயின் அவளைக் காதலித்த தோளான் என்று இங்குக் கூறப்படுபவன் யாவன்? நளனென்று கொள்ளுதற்குச்

சில இடையூறுகள் இருக்கின்றன. கொங்கைமேல் காதலித்தான் என்பது அவனின் தூய்மைவாய்ந்த அன்பிற்கு இழுக்காம். இனி, மெய்வருபோகத்திற்கே மனைவியை நச்சினனென்ற பழுது கொங்கையெனும் சொல்லைக்கொண்டே அவன்மீது சார்த்தாமல்பார்த்தால், அவன் மனம் இப்பொழுது புரள்வதற்கு நிபம் இருப்பது போலும் இல்லைபோலவும் தோன்றுகின்றது. நைடதத்தின்படி தமயந்தி சூதாடு மிடத்தில் இருந்திலள். அங்கு யாவும் தோற்றபின் நளன் அவள் மாளிகையை நண்ணி உற்றதைச் சொல்லினன். 'இவளைப் பணையந்தா' வென்று புட்கரன் பின் சுட்டிச் சொல்வதால், தன்னயலில் தமயந்தியை வைத்துக்கொண்டு நளன் சூதாடினன் என்பது புகழேந்தியின் கருத்து. சூதிலே முதலில் மணிப்பூணாரத்தைப் பந்தயமாய் ஒட்டினன் நளன். தனக்குமாறாகக் கவறு விழுவதுகண்ட நளனின் மனம், இம்மணியாரத்தைத் தோற்பது போலவே யாவையுந் தோற்க நேர்ந்தால் தமயந்தி மிகவருந்த அவ்வருத்தத்திற்குத் தான் காரணமாவதோ எனச் சிறிது புரண்டிருத்தல் அமையும். மற்றபடி, இதுவரையில் நளன் ஒன்றுந் தோற்கவில்லை யாதலாலும், முதற் பந்தயத்தில் கவறு விழுந்ததை இன்னும் கணக்குக் கூடப் பார்க்கவில்லை யாதலாலும் இதற்குள் மனம்புரள நளனுக்கு நியாயமில்லை.

கலியின் மனந்தான் தமயந்தியைக் காதலித்துப் புரண்டதென்று நினைப்பதற்கு நளவெண்பா இடந் தந்திலது. தமயந்தியைக் கலி விரும்பி, நளனைப் பிரித்து அவளைத் தான் அடைய எண்ணங் கொண்டிருப்பதாக நைடதத்தில் கூறப்பட்டிருப்பினும், தேவர்களுக்குற்ற அவமானத்திற் கெதிராய்ப் பழி வாங்குவதொன்றே கலியின் கருத்தென்று நளவெண்பாவிற் காண்கின்றோம்.

மனம்புரண்ட தோளான் புட்கரன், என்னும் பொருள் பொருந்தும். பின் அவளைப் பணையமாகவுங் கேட்கின்றான். ஆனாலோ செய்யுளிணைமைப்பையும் சொல்லின் தொடர்பையும் நோக்குங்கால் ஒருசிறிது வலிந்தல்லாது, 'தோளான்' என்பதைத் 'தமையனொடு' என்பதோடு இணைக்க இயலாதென்பது தெரியவரும்.

வைத்த மணியாரம் வென்றன் மறுபலகைக்
கொத்த பணைய முறையென்ன—வைத்தநிதி
நூறு யிரத்திரட்டி நூறுநூ றாயிரமும்
வேறாகத் தோற்றனவ் வேந்து. 45.

பல்லா யிரம்பரியும் பத்துநூ றாயிரத்துச்
சொல்லார் மணித்தேருந் தோற்றதற்பின்—வில்லாட்
முன்றோற்று வானின் முகிறேற்கு மால்யானை [கள்
பின்றோற்றுத் தோற்றான் பிடி. 46.

சாதுரங்கம் வென்றேன் றரும்பணைய மேதென்ன
மாதுரங்கம் பூணு மணித்தோரான்—சூதரங்கில்
பாவையரைச் செவ்வழியாழ்ப் பண்ணின்மொழிப்
பூவையரைத் தோற்றான் பொருது. [பின்னுகுழற்47

கற்பின் மகளிர்பா னின்றுங் கலையல்குல்
விற்கு மகளிர்பான் மீண்டான்போல்—நிற்கும்
நெறியானை மெய்ம்மைவாய் நின்றானை நீங்கிச்
சிறியானைச் சேர்ந்தா டிரு. 48.

குறிப்பு:—யாவையும் நளன் தோற்கச் செல்வமெல்லாம் புட்கரனைச் சேர்ந்தன. செல்வத்திற் கிறைவியாகிய திருமகள், நளனைவிட்டு அக்கயவனை அடைந்ததற்குக் கற்புடைய மனைவியை நீத்துப் பரத்தையரைப் பார்த்தணையும் புல்லனின் செயலைக் கவி உபமானமாகக் கூறுகின்றார்.

சிவகாமி சரித ஆராய்ச்சி.

[613 - வது பக்கத் தொடர்ச்சி]

ஒருதினம் அந்திப்போது, தவவடிவாய்த் திகழ்ந்த இளங் குமரனொருவன் அடவியின்வழியாய்ச் செல்வான், தான் அடையும் நெறி தெரியகில்லனாய்த் தன்னெதிர்ப்பட்ட ஒரு முனிவனைப் பார்த்து, "மோன நிலைகொண்ட முனிவ! ஆரிருளோ நெருங்கும் சமயம் வந்துற்றது. இப்பாழடவியில் சுழன்று பாதை விடுத்தலைந்து உடலம் எய்த்தேன். வீடுளதேல் அடையும் நெறியருளாய்'' என இரந்து வேண்டினன். இங்கு ஆசிரியர் "உடல மாறும் வகை வீடுளதேல் அடையும் நெறி அருளாய்'' என்னும் அடியை இருபொருள்பட அமைத்தது வியக்கற்பாலது. பின்வரும் கூற்றுக்கேற்ப, "அடிகளே! என் தலைவனைக் காணப் பலவிடங்கள் சென்று அலைந்து எய்த்தும் இன்னும் காணாதிருப்பதால், இவ்வாறு என் தலைவனில்லாது துன்புறுதலைக் காட்டிலும் உயிர்விடுதல் சாலவும் நலமாம் என்று எனக்குத் தோற்றுகின்றதாகலின் இந்தயாக்கை மாறிவிடுதலை யடையும் வகை உளதாயின் அதனை அடையும் நெறி சொல்லியருளாய்'' என்னும் உள்ளுறை பொருள் தொனித்தல் உய்த்துணரத் தக்கது.

பெரிய முனிவன், "இதுவோ வெட்டவெளி. இதில் உலகினர் அடைய அஞ்சுவர். அறங்கிடந்த சிந்தையராய் ஆசையெலாந் துறந்த அதிவீரரே இங்கு அடைபவர். சென்றுறைய மடமுமிலை; திகழ்வெளி என்வீடு. வேதனையும் மெய்ச்சலிப்பும் விட்டகல வேண்டின் அன்புடன் நீ என்பிறகே அணைவாய்'' என்று கூறினன்.

ஈண்டு நீத்தாரின் தகுதியை விளக்கப்புகுந்த ஆசிரியர் தம்மை யொறுத்து, மனமெனப்படுவது இல்லையாம்படி செய்துகொண்டவர்களுக்கு வீடுவாசல் என்ற பந்தங்கள் சேருதற்கில்லை யென்னும் கருத்தைச் 'சிந்தையற நொந்தவர்க்குச் சேரவிலை பந்தம்' என்று கவின்பெற அமைத்து, அதனோடமையாது மறந்தான் அறக்கற்று அறிவோடிருந்து இருவாதனையற்று இறந்தவர் பெருமை அளவிலது ஆதலாலும், உரனென்னும் தோட்டியால் பொறிகளாகிய யானை யைந்தினையும் தத்தம் புலன்கள் மேற் செல்லவிடாமற் காப்பவர்கள் முற்றத்துறந்த முழுமுனிவர்களே யாதலாலும், அவர்களையே ஆற்றலுடையவர்கள் என்று ஆன்றோர்கள் அருளியுள்ளதாலும், மக்களுருவம் பெற்றவர்களேயாயினும், அம்மக்களால் செய்ய முடியாத அரிய காரியங்களையும் அவர்கள் செய்து முடித்தலாலும், போர்வீரர்களாலும் விலக்க இயலாத மாதர்மயக்கத்தை இம்முனிவர்கள் அறவொழித்தலாலும், 'அறங்கிடந்த சிந்தையராய் ஆசையெலாந் துறந்த அதிவீரர்' என்னும் அடைமொழிதந்து தாம் மெய்யடியார்களிடத்துக் கொண்டுள்ள அன்பை இதன் வாயிலாய் வெளியிடுகிறார். மணிமேகலையில், 'மாரனை வெல்லும்வீர' என்று கூலவாணிகன்மகன் சாத்தனார் கூறியுள்ளதையும், திருக்குறளில், 'ஒண்ணுதற்கோஒ வுடைந்ததே ஞாட்பினுண்ணாரு முட்குமென் பீடு' என்று செந்நாப்போதார் அருளியுள்ளதையும் நோக்குவார்க்கு இவ்வாசிரியர் துறவிகளை, 'அதிவீரர்' என்று அழைத்ததன்சிறப்பு இனிது விளங்கும்.

முனிவனின் இனியமொழியை இருசெவியும் குளிரக்கேட்ட தவமகன் ஏதோ தன் பழநினைவு எழவும், கண்களில் நீர்சொரிய வணங்கி அம்முனிவனைப் பின்தொடர்ந்தான். அந்திக்காலத்தின் அழகெலாம் மறைய இருள் நாலாபுறத்தும் பரவலாயிற்று. வானத்தில் விண்மீன்கள் ஒவ்வொன்றாய் மிளிர்ந்தன. பிரிவுற்ற காதலர்களின் உயிரினைக் கொள்ளைகொள்ளும் இரவும் வந்துற்றது. வானத்தில் சந்திரன் தோற்றாததால் நல்லபாம்பின் சூட்டில் அமைந்துள்ள மாணிக்கத்தின் ஒளியும், மதம் பொருந்திய வாரணத்தின் மருப்பின் ஒளியும், சினம் மிக்க புலியின் விழிநின்று தீப்பொரிபோல் விளங்கும் ஒளியும் அல்லாது அவ்வடவியில் வேறொரு ஒளியில்லை.

இவ்வாறு ஆசிரியர் சரிதத்தைக் கூறி வருகையில் பின்னால் நிகழும் நிகழ்ச்சியை முன்னால் குறிப்பாகக் கூறிச் செல்லுமுறை போற்றத் தக்கது. இவ்விடத்தில், "ஏதோ தன் பழநினைவும் எழ இருகண் பனித்து'' என்று தவமகனின் செய்கையைக் குறித்தது, தவமகனாக வேடங்கொண்ட சிவகாமி, தன் தலைவனின் குரல், சாயல்முதலிய குறிகள் இம்முனிவனிடத்துக் கண்டமையைத் தெரித்தற்கேயாம். இதன்றியும்,

"இந்திர நற்சாலவித்தை யெதுவோ வொன்றிழைக்க
இட்ட திரையெனத் திசைக ளெட்டும் இருள்விரிய
அந்தரத்தே கண்சிமிட்டிச் சுந்தர தாரகைகள்
அரிய ரகசியந் தமக்குள் அறைந்து நகைபுரிய''

என்றும், பிறிதோரிடத்தில்,

"விந்தை நடப்பது தெரிக்க விளிப்பவரில் வாவல்
விரைந்தலைய மின்மினியும் விளக்கொடு பின்னோட''

என்றும் கூறிச் செல்கின்றார். இதனால் இவ்வாசிரியர் இயற்கையழகில் தம் அறிவைச் செலுத்தி இன்பமடைபவர் என்பதும் தெரிகின்றது.

அன்பொடு அழைத்தேகும் முனிவன் அடியை யன்றி வேறொன்று மறியாது பேரயர்வினால் மனம் இறந்து தொடரும்தவமைந்தன் முனிவனுடன்ஒன்றாகச்செறிந்து நிறைந்த முட்காடுகளை இருபுறமும் ஒதுக்கி நுழைந்தும், உயர் மலையின் குகை குதித்தும், கான்யாறு பல தாண்டியும் சார்பிலர்க்குத் தனித் துணையாம் தவமுனிவன் இடத்தை யடைந்தனன். அவ்விடத்தில் விறகுக் கட்டைகள் எரிந்து கொண்டிருந்தன. மற்று, வீடு எனும் பெயர்க்குரிய வாயிலெனப் பூட்டென்ன மதிலென்ன வழங்கும் மரபொன்று மின்றியிருந்தது. துறவிகள் தாங்கள் இயமம் நியமம் முதலிய எண்வகை யோக உறுப்புக்களைச் செய்தற்கு அடவியில் ஏதேனும் ஓரிடத்தைக் குறித்து வாழ்வார்களேயன்றி, இல்லறத்தார்போன்று உலகமாய்கையில் சுழன்று தாங்கள் வசிப்பதற்கு வீடென்றும் வாசலென்றும் இன்னும் பலவித நலன்களை நாடும் உள்ளத்தினரல்லர் என்பதை நமக்கு ஆசிரியர் தெரிவிக்கிறார். அதல்லாமலும், தூய உள்ளமுடைய துறவிகளைச் சூழ்ந்துள்ள விலங்குகளும் தீயகுணங்களைவிடுத்து அவர்களின் நிலையையடையும் என்னும் உண்மை தெரிப்பார். அம்முனிவன் வனவிலங்குகளெல்லாம் அஞ்சும் அனலின் அருகாற் படுவதாய நெருப்புக் கொழுந்துவிட்டெரிவதை,"நேயமுடன் எவ்வழியும் நோக்கவரைத் தன் றுணைக்கு நிறுவுதலை வளைத்தழைக்கும் நெருப்பு'' என்று புனைந்துரைத்தார்.

அவ்விடத்தை அடைந்ததும் முனிவன் நெருப்பை அதிகப்படுத்துவதற்கு விறகடுக்கி,ஒருபக்கத்தே கூசிநிற்கும் மைந்தன் அகமுவப்ப, "இனி நடக்க வழியுமில்லை. இதுவே நாம் உறையும் இடம்! இதுவரையும் பனிபொழியும் வழிநடந்த பனிப்பகல, இக்கனலினருகே சிறிதுநேரம் இருந்து பிறகு, பழம் கிழங்கு முதலியவற்றில் சிலவற்றைப் புசிக்கின் உனது இளைப்புப் பறக்கும்'' என்று சொல்லி இனிய பழங்களாகிய, மா, பலா, கதலி முதலியவைகளை அவன்முன் வைத்துப் புசிக்கச் சொன்னான். தவமைந்தன் அதனைப் புசியாது ஒருபுறமாக ஒதுங்கிநின்று மௌனமுற் றிருந்தான். முனிவன், "மைந்த! உனக்குக் கூச்சம் ஏன்? நாமிருவரும் ஒருவரெனில் எவர் பெரியர், எவர் சிறியர். ஆதலால் அன்ப! அனல் அருகில் சிறிது இருந்து பனிப்பு நீங்கியபின் இப்பழங்களைப் புசிப்பாய்'' என இரண்டுமுறை இயம்பியும், அம்முனிவனருகே நெருங்காமலும் எதிரொன்றும்இசையாமலும் இவன் மனமிறந்து தனியே வறிதிருந்தான்.

இவ்வாறு ஒன்றும் இசையாது புறம் ஒதுங்கி வறிதிருந்த தவமைந்தனின் அசைவற்ற அவ்வரு நிலையைப், "பாதிமுக மதி யொருகைப் பதும மலர் மறைப்பத் திகழ்ந்த சுவர் ஓவியம்போல் இருந்தவனை'' எனச் சித்திரித்த ஆசிரியரது ஓவியத்தில் ஆழ்ந்த நுண்ணறிவு வியக்கற்பாலது.

அவன் மலைவினை இன்னதெனத் தெளிய முனிவன் பல பகர்ந்தும் ஒரு மொழியும் அவன் செவியில் புகுந்ததாகத் தெரியவில்லை. பின்னும் முனிவன், விழிமாரி பொழிய முகங் கவிழ்ந்திருக்கும் தவமகனை நோக்கி, "அன்ப! உனது கவலைதான் என்ன? உன் உளத்திருப்பது எனக் கோதாயோ? இவ்விளம் பருவத்தில் இல்லத்திலுற்ற இடுக்கணால் அலக்கணுற்று இவ்வேடம் பூண்டு வந்தனையோ? அன்றி அரும்பொருளை இழந்தனையோ? நண்பர்கள் உன்னை இகழ்ந்தனரோ? நீ காதல் கொண்டு விழைந்த பெண், பெருஞ் சூதாய்க் கைவிடுத்துக் கழன்றனளோ? மெய்யை இற்றெனக் கழறாய்! அந்தோ! இவ்வுலகில் அமைந்த சுகம் அத்தனையும் எக்கீர்மையன வென் றெண்ணுகின்றாய்! இங்கு நம்முன் எழுந்து எழுந்து அடங்கும் அழலினுடைய நிழலென நீநினைவாய். பொன் வெள்ளி எனக் கருதி மகிழும் மண்வகையைக் காப்பதெல்லாம் இலவு காத்த கிள்ளையை யொக்கும் என்று எண்ணுவாய்! நண்பர், உறவினர் நமை நாடி உறவாடுவது நெய்க்குடத்து எறும்பு நண்ணுவதை மானும். பெண்கள் அகக்காதலெல்லாம் உலகவழக்கில் பேசும் முயற்கொம்பே யாகும்! அவர்கள் உடலம் எல்லாம் பெருங் கபடம் இடுகின்ற கலன்என்று அறிஞர்கள் கூறுவார்கள். இவ்விதம் இவற்றின் தகுதியெல்லாம் தெரிந்தும் மயங்கியுழலும் இம்மனிதர் மதிதான் என்னே!'' என்று இனைய கூறலும், தவமகன் கனவுகண்டு விழித்தெழுந் தவனைப்போல் திடுக்கிட்டு விழித்து வெட்கத்தினால் முகம் வெளுத்தான்.

இருமையின்வகைகளும்தெரிந்தவர்களே துறவுநிலையை யடைதற்குத் தகுதி வாய்ந்தவர்களாதலால் அவ்வுண்மை தெரிந்த ஆசிரியர்,முனிவன் தவமைந்தனை வினவு முகத்தான் விளக்கும் முறை போற்றற் பாலது. யாவர்க்கும் தான் அனுபவித்த துன்பமோ அல்லது இன்பமோ மிக்கெழுதல் இயல்பாதல் நோக்கிப் பெரிய முனிவேடம் புனைந்த சிதம்பரன் தன் காதல் பொய்த்ததுபோல் இத்தவமைந்தனும் தன் காதலியினால் ஏமாற்றப்பட்டானோ என்ற நினைவினால், "காதல் கொள நீ விழைந்த மாது பெருஞ்சூதாய்க் கைவிடுத்துக் கழன்றனளோ?'' என்று வினவினன். மக்களுக்குத் தாங்கள் விழைந்த பொருள் கிடைக்காதொழியின் இவ்வுலகமே அவர்களுக்கு வெறுப்பாகத் தோன்றுதல் இயற்கையாகலின், முனிவேடம் புனைந்த சிதம்பரனும் தான் காதலித்த பெண் தன்னைக் கை விடுத்ததால் அவனுக்கு இவ்வுலகம்

189015

பாழ்த்துத் தோன்றியது. அவ்வித அவன் நிலையை இப்போது இத்தவமைந்தனுக்குக் கூறுவான், "ஐயோ! இவ்வையகத்தில் அமைந்த சுகம் அனைத்தும் அழலால் இங்கெழுந்தடங்கு நிழலாக நினையாய்" என்றான்.

இதைக்கண்ட முனிவன் இறும்பூது எய்திக் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பின் வெளிச்சத்தில் அவன் முகத்தை உற்று நோக்கினான். இவ்வாறு கூர்ந்து நோக்கிய முனிவனுக்குத் தவமகனின் வேட ரகசியங்களெல்லாம் வெட்ட வெளியாயின. அது போழ்தத்து, தவமகனது வேடம் நிலைகுலையலுற்றது. நின்மல விபூதி பூசிய மேனி பொன்மயமாய் விளங்கி ஒளி விரித்தது. செவ்வரிபடர்ந்த கண்ணிணையானது பெண்மையுருவைத் தெரித்தது. கூசுமுகம் நாணத்தால் கோணி எழில் வீச, குழற்கற்றை சரிந்து சடைக்கோலத்தை ஒழித்தது. விம்மிய வெய்துயிர்ப்பு எழுதலினால் வீங்கி யெழு கொங்கை, புனைவேட முழுதும் அழித்தது. இவ்வாறு தன்நிலை குலையவும் அப்பெண் எழுந்து இருடிபதம் வணங்கினாள்.

ஒருவன் எவ்வளவுதான் தன்னைப் பிறர் அறிந்து கொள்ளாதவாறு கரந்து வேடம் புனைந்தாலும், அவன் உண்மைநிலையை யறியவேண்டுவார் கூரியநோக்கோடு அவனுடைய முகத்தைக் காண்பார்களானால் அம்முகமே அவன் உள்ள நிகழ்ச்சிகளையும் செயலையும் தெரித்துச் சான்று பகரும். இதனை யுட்கொண்டே செந்நாப்போதாரும்,

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்"

என்று அருளினார். அதுவுமல்லாமல் ஒருவனுடைய கரவை வெளிப்படுத்த வேண்டுமானால் அவனுக்கு இனியராயினாரைக்கொண்டும், இனியராயினாரைப்பற்றிப் பேசியும் அளந்தறியலாம். எவ்விதமெனில், ஒருவன் தனக்குத் தொடர்பாயினாரைக் கண்டவிடத்தும் அல்லது அவர்களைப்பற்றிப் பேசிய காலத்தும் அவனையறியாது அவர்கள்பால் அன்பு எழுதலினால் அவன் வாயினின்றும் சொற்கள் வெளிப்படும். அச்சொற்களைக் கொண்டு அவர்கள் உண்மை நிலையை யறியலாம். இது நளனின்சரிதத்தில்கிடக்கின்றது. நளன் தன்னைப்பிறரறியாதவாறு கார்கோடக னென்னும் பாம்பைக் கொண்டு உருவமாறி வாகுகனென்னும் பெயரோடு ரிதுபர்ன மகாராஜனிடம் தேர்ப்பாகனாக அமர்ந்து ஊழியஞ் செய்யுங்காலத்து, இவனைக் கண்டுபிடிக்க வேண்டித் தமயந்திசெய்த சூழ்ச்சியை நம்பி இரண்டாம் சுயம்வரத்துக்குப் போக அயோத்தி அரசன் வாகுகனைத் தேர்பூட்டச் செய்து அதில் ஆரோகணித்து வீமராசன் அரண்மனைக்குச் சென்று அவ்வரசனோடு அளவளாவி யிருக்குங் காலத்து வாகுகனென்னும் மாறு பெயர் பூண்ட நளன் இரதசாலையில் குதிரையைத் தேரினின்றும் அவிழ்த்துவிட்டுச் சிந்தனைசிரந்தனாயிருந்த காலத்துத் தமயந்தி இவன்தான் நளன் எனப் பல குறிகளால் அறிந்தும், கடைசியாகத் தன் மைந்தர்களை அவன் முன்னர் விடுத்து அவன் செயலைக் கவனிக்கலானாள். நளன் தன் பிள்ளைகளைக் கண்டவுடன் அவனை யறியாது அவன் கண்களில் நீர் ஆறாக ஓடியது.

"அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்"

என்னும் அமுதவாக்கும் பொய்க்குமோ? அதனோடமைந்தானே! 'என்மக்கள் போல்வீர்காள்! நீவிர் யார் மக்கள்' என்று வாய்விட் டாற்றினான். இந்நிலைமையைக் கண்டதும் தமயந்தி தன் புருடனை அறிந்து மகிழ்ந்தாள். இவ்வாறு தன் உருமாறியிருந்த நளனையே தமயந்தி முகக்குறிகொண்டும், அன்பின் விளைவைக்கொண்டும் கண்டு பிடிப்பாளானால், புனை வேடத்தையோ இவ்விரண்டு அளவைகளால் காணமுடியாது? இவ்வித உண்மைகளை ஆசிரியர்,

"இசைத்தவசைச் செயலுணர எண்ணிமுகம் நோக்கி
இருந்த யதியிக் குறிகள் கண்டிறும் பூதுற்றெய்தி
விசைத்தியங்கும் எரியெழுப்பி மீண்டும் அவன்நோக்க
வேஷாகசியங்க ளெலாம் வெட்டவெளி யான"

என்றும்,

"உரைத்தமொழி கேட்டிருடி யுடல்புளகம் மூடி
ஊறிவிழிநீர் வதனம்ஒழுக அஃதொ ளிக்க [தான்
எரிக்க விறகெடுப்பவன் போல்எழுந்து நடந்திருந்"

என்றும் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் முறை பாராட்டத் தக்கது.

இவ்விதம் தன் மெய்விளங்க இருந்தமகன் எழுந்து இருடிபதந் தலைவணங்கிப் பின்வருமாறு தன் வரலாற்றினை யியம்பலானாள்:—

N. துரைக்கண்ணன்.

தேவாரமும் ஐந்திணையும்.

1. தமிழரும் ஐந்திணையும்.

தமிழிலுள்ள பொருளிலக்கணம் கூறுகின்றன யாவும் ஐந்திணைகளைத் தழுவியே நிகழும். ஆதலால் அப்பொருளிலக்கணம் கற்க விரும்புவார் தமிழ்நிலம் ஐந்தின் தன்மை யாவும் நன்குணர்தல் வேண்டும். அவைகளை இவ்வாசிரியர் தேவாரமென்னும் திவ்விய இலக்கியத்தின் உதவிகொண்டு இக்கட்டுரையில் இனிது விளக்குகின்றார். எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் அணியிலக்கணமும் நம் தமிழ்ப்பாடத்தில் சொல்லி வருகின்றோம். பொருளிலக்கணத்திற்கு, ஸ்ரீமான் இராமஇரத்நம் ஐயர் வரைந்துவரும் "அகப்பொருள் வரலாறையும்," இந்தத் "தேவாரமும் ஐந்திணையும்," என்னும் விஷயத்தையும் நமது நண்பர்கள் ஓதிக்கொள்ள வேண்டுகின்றோம்.

பத்திரிகாசிரியர்.

ஆதியில் தமிழ் நாட்டின் இயற்கை ஐந்து வகைத் தோற்றமாகும்.

நடுவ ணைந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே—தொல்காப்பியம்.

என ஆன்றோர் ஐந்திணை வகுத்தனர். இவை ஆன்றோர் தற்பனையல்ல. கண்டவற்றைக் கண்டவாறே வகுத்த காட்சிகளேயாம். தற்காலத்தில் இவை முற்றும்மாறி நிலைகுலைந்திருப்பினும், நம் முன்னோர் வகுத்த இவை, அக்கால நிலையி லெங்ஙனம் தோன்றிய வென்பதையும், பின்னர் மத்திய காலங்களென்று (Middle ages) ஆங்கில அறிஞர் கூறும் காலமான தேவார காலத்தி லெவ்வாறு காணப்பட்டன வென்பதையும் சற்று ஆராய்வோம்:—

திணை வகுப்பும் வந்த விதமும்

தமிழர், கபாடபுரத்தைக் கை விட்டதும், தென்னிந்திய தீபகல்பத்தை யடைக்கலம் புகுந்து கடலோரமாயுள்ள தலங்களிற் குடிபுகுந்து அங்குப் பயிர்த் தொழிலாலும், தொன்று தொட்டு திரைகடலில் வங்கங்களால் வணிகம் பூண்டு உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களையும் தமது பண்ட மாற்றலால் வசப்படுத்தலாலும், மேன்மை யடைந்தன ரென்று தமிழ்ப் புலவர்கள் கூறுவர். இவ்வாறித் தேயத்திற் குடிபுகுந்த தமிழர் கீழ்த்தொடர்ச்சி மலைக்கும் கடலுக்கும் இடையே சோழ பாண்டிய ஆட்சியிலும், மேற்றொடர்ச்சி மலைக்கும் கடலுக்கு மிடையே சேரமன்னன் ஆட்சிக்கும் உட்பட்டு நாளடைவில் விருத்தியடைந்தன ரென்றும் அறிகின்றோம். அக்காலத்திலேயே நமது நாட்டின் ஐந்திணை யிலக்கணம் பளிங்கெனக் காட்டியது. இத்தமிழருக்குக் குடியிருப்புத் தலமும் வர்த்தகஸ்தானங்களும் கடலுக்குச் சமீபமான நாடுகளானமையால், கடலுக்கு யாதொரு சம்பந்தமின்றி ஒரு தேசமிருக்கக் கூடுமென்பதும், அத்தகைய நாட்டுக்கு வணங்காமுடி மன்னனொருவன் ஆட்சி செய்யக் கூடுமென்பதும், தோன்றியிராதென்று நாம் அநுமானிக்கலாம். சரித்திர வாயிலாயும் அத்தகைய நாடு, சிறப்புடன் விளங்கிய தொன்றும், அக்காலத்தில் நாம் காணக் கூடவில்லை. ஆகையால் ஐந்திணையென்று அக்காலத்திய புலவர் வகுத்தது, எவ்வரசனுடைய நாட்டுக்கும் இன்றியமையாத ஐந்துவகைத் தோற்றங்களி னிலக்கணமே. அவற்றை நன்குணர்ந்து நோக்கின் நமது நவீனநாகரிக அஞ்ஞானத்திற்கும், பூர்வீகப் புலவோர் ஞானத்திற்கும், உள்ள பேதா பேதங்கள் செவ்வனே புலப்படும்.

மருதம்

தென்னிந்தியாவில் குடிபுகுந்த பண்டைத்தமிழர், மருதச் செடிகள் மலிந்த நிலவள மிகுந்த பாகங்களில் தமது ஊர்களை நியமித்துச் சுற்றிலும் செந்நெல், வெண்ணெல் பயிர் வைத்தனர். நிலவளத்தாலும், கால மழையாலும் இப்பயிரே இந்நிலத்திற்குச் சிறந்த பயிராயிற்று. மற்றைய நிலங்கள் அவ்வச் செடிகள் விசேஷத்தால் அழைக்கப் பட்டது போல் இதையும் மருதமென்றனர் நமது முன்னோர். இந்நிலத்தில் எவ்விதப்பயிரும் செய்யக் கூடுமாயினும் நஞ்சைப் பயிருக்கே இது உரித்தாயிற்று. செந்நெல்லே, வெண்ணெல்லைக் காட்டிலும் அக்காலத்தில் மாட்சிமை யடைந்ததெனத் நமது இலக்கியங்களா லறிகின்றோம். தேவாரத்தில் வயல்களைப் புகழ்ந்துரைக்குங்காலைப் பெரும்பாலும் செந்நெல்லையே மூவரும் வியந்து பாடுகின்றனர்:—

தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந்நெல்
துன்னிவளர் செம்பொனெங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை
வந்து நலியாத வண்ண முரைசெய்
ஆனசொன் மாலையோது மடியார்கள்
வானிலர சாள்வ ராணைநமதே
—சம்பந்தர்.

என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே!
மின்னு வார்சடை வேதவிழுப் பொருள்
செந்நெ லார்வயற் சேறையுட் செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே!
—அப்பர்.

இழைதழுவு வெண்ணூலு மேவுதிரு மார்பி
னீசன்ற னெண்டோள்கள் வீசியெரியாடக்
குழைதழுவு திருக்காதிற் கோளரவ மசைத்துக்
கோவணங்கொள் குழகனைக் குளிர்சடையினானைத்
தழைதழுவு தண்ணிறத்த செந்நெலத னயலே
தடந்தாள மென்கரும்பின் றாழ்கிடங்கினருகே
கழைபுழுவித் தேன்றொடுக்கும் கழனிசூழ் பழனக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே!
—சுந்தரர்.

இவ்வாறு மூவரும் செந்நெல்லைப் புகழ்ந்திருப்பதாலும், நமதுநாட்டுப்புறங்களில் வழங்கும் பழமொழியான "அன்றறுத்த கார், ஆறுமாத செம்பா" என்பதாலும், இப்போது நாகரிக மிகுதியால் நாம் விலக்கிவிடும் (முட்டைக்கார் என்னும்) செந்நெல் நம்முன்னோருண்டு தேகத்திடம் பெற்றிருந்தனரென் றறிகிறோம். இக்காலத்திலும் அந்நெல்லை யுணவாகக்கொண்டிருக்கும் மாந்தர், சென்னை நாகரிகத்தில் பொலிந்து விளங்காராயினும், நோயற்ற வாழ்வுடன் நெடுங்காலஞ் சீவித்திருக்கின்றனர் பெரும்பாலும் மருதத்தையடுத்து அரசனிருப்பிடமாகிய நகரங்கள்தோன்றலாயின. நெற்பயிர் நிலங்கள், அவற்றிற்கு ஜலாதாரமான ஏரி, குளங்கள், சோலை முதலியன மருதநிலமென நமது இலக்கியங்களிற் கூறப்படும். இத்தலமே பூர்விகத் தமிழர் பூமியாம். இதிலுள்ள வூர்கள் பெரும்பாலும் இரண்டொரு குடும்பத்தினராயிருப்பர். இக்காலத்திலும் "ஊர்—பங்காளி" "உடன்—பங்காளி" யென்னும் சொற்றொடர்கள் வழங்குவன, பண்டைக்காலத்திய ஊர்நிலை யனுசரித்தேயாம். வேளாளமக்கள் வசிக்கும் சில நாட்டுப்புறத்திய ஊர்களில், ஒரு மனிதன் இறந்து போனால், அவ்வூரிலுள்ள வீடுகளில் யாவரும் பிணம் எடுக்கும் வரையில் உணவுகொள்ளார். பிறகு ஸ்நானம் செய்து சமையல் ஆரம்பிப்பர். இப்பழக்கம் இன்றும் காணலாம். இதனால் முற்காலத்தில் ஒவ்வொரு ஊரின் வாசிகள் யாவரும் ஒரே குடும்பத்தினர்போல் ஒழுகினரென்று நாம் அனுமானிக்கலாம்.

மருதநிலத்திற் குடிபுகுந்த பழந்தமிழர், உழவு, வணிகம் ஆன்காத்தல் ஆகிய தொழில்களைப் பூண்டிருந்தனர். இத்தொழில்களை, ஆரியர்களில் வைசியர் பூண்டதால் இவரை வைசியரென்று ஆரியர் கூறுவாராயினர். ஆயினும் இவர்கள் "கிழார்" என்றும் "பூசுரர்" என்றும் மூவகை இருபிறப்பாளர் தொழில்களைக்கொண்டு விளங்கினரேனும், இவர்கள் ஆரியசின்னங்களைத் தரிக்காமல் சுத்தத்தமிழராய் ஆதிசைவராய்(அக்காலத்திய மாமிசபக்ஷிணிகளான ஆரியர்கள்போலிராமல்)நமது நவீன நாகரிகத்து நடவடிக்கையின்றிப் "பறப்பைப் படுத்தெங்கும் பசு வேட்டெரியோம்பும் சிறப்ப"ராய் வேளாண்மை நடத்தி வந்தனர். தம் தொழில்களுக்கு உதவிபுரிவான், இவர் தென்னிந்தியாவின் பூர்வீகப் பழங்குடி மாக்களைத் தங்கள் குடிமக்களாக்கித் தமது நிலத்திற்குப் பக்க நிலங்களிற் சேரிகள் முதலிய இடங்களமைத்து, அவர்களிடம் அன்பு செலுத்தி அன்னோரைத் தங்கள் காரியங்களுக்குப் பயன் படுத்தினர்.

நெய்தல்

மருத நிலத்தில் வசித்த நம்முன்னோரைச் சுற்றிலுமிருந்த புராதனக் குடிகள் (பாலை நீங்க) மற்றைய மூவகை நிலங்களி லுள்ளவர்களில் மிகவும் நெருக்க முள்ளவர்கள் நெய்தல் நில மாந்தர்களேயாம். இவர்கள் உப்புக்கும், வங்கங்கள் ஓட்டுவதற்கும் பயன் பட்டனர். கடலில் மூழ்கி முத்துச் சிப்பிகளைக் கொண்டுவருபவர்களு மிவரே:—

திரைவாய்ப் பெருங்கடன் முத்தங்
குவிப்ப முகந்துகொண்டு
நுரைவாய் நுளைச்சியர் ஓடிக்
கழுமலத் துன்னமுந்தும்

விரைவாய் நறுமலர் சூடிய
விண்ணவன் றன்னடிக்கே
வரையாப் பரிசிவை நாடொறு
நந்தமை யாள்வனவே.

—திருநாவுக்கரசு நாயனார்.

'நுளையர்' என்பது நெய்தல் நிலத்தில் தாழ்ந்தோரைக் குறிக்கும். அந்நிலத்திய உயர்ந்தோனைச் "சேர்ப்பன்" என்பர். நெய்தல் நிலமுடைய அரசனைச் 'சேர்ப்ப" வென்று விளிப்பர். இவர்கள் கடலகமான பட்டினங்களிலும், பாக்கங்களிலும் வசிப்பவர். இதனால் இவரைப் பட்டினவரென்பர். இக்காலத்திலும் நெய்தலில் தற்கால வகுப்புக்களான "சின்னபட்டனவர்", "பெரியபட்டனவர்" என்னும் சாதியர், பண்டைக்காலத்திய "நுளையன்", "சேர்ப்பன்" என்னும் பிரிவுகளில் முறையே சேர்ந்தவரெனத் தெரிகின்றது. இந்நிலமாந்தர் வருணனை வழிபாடு செய்பவரென்று தொல்காப்பியம் கூறும். ஆயினும் தேவாரக்காலத்தில் நெய்தல் நிலத்தவர் யாவரும் சைவ சமயத்தவரா யிருந்ததாய்க் காணப்படுகின்றது. சம்பந்தர் காலத்திய சமணர்களால் இந்நிலவாசிகள் துன்பமும் அடைந்திருக்கலாம்.

"கழியருகு பள்ளியிட மாகவரு மீன்கள் கவர்வாரும்
வழியருகு சாரவெயி னின்றடிசி லுள்கிவரு வாரும்
பழியருகி னொழிக பாண்மையொடு நின்றுதொழு [தேத்தும்
அழியருவி தோய்ந்தபெரு மாறுறைவ தவளிவண [லூரே." —சம்பந்தர்.

திருக்கடனாகையில் (Negapatam) அதிபத்த நாயனாரைப்போல் சைவர்கள் பற்பல மீன் வணிகர் குப்பங்களிற் றங்கள் குலத்தொழிலை நடாத்திச் சைவசமயம் பூண்டொழுகி யிருக்கலாம். பெரும்பாலும் பாடல்பெற்ற சிவஸ்தலங்கள் நெய்தற் பூமியிலே காணப்படுகின்றன. தேவாரத்தில் காணப்படும் வர்ணனைகளாலும் அவ்வாறே தோற்றுகின்றன.

முல்லை மருதநில வாசிகளுக்கு, நெய்தல் நிலக்குடிகள்போல் பழக்கத்தில் நெருங்கியவர்களும் துணைவராய்ப் பயன்பட்டவர்கள், முல்லை நிலத்துக் குடிகளாகிய இடையர், ஆயர் என்பவர். இடையர், பெரும்பாலும் ஆடுகளை மேய்ப்பவர். ஆயர், கால்நடைகளை மேய்ப்பதுடன் புன்செய்ப் பயிர்களையும் (வரகு, சாமை, மூதிரை முதலியன) செய்வர். இந்நிலத்தின் அதிபதியை நாடன்என்றும் தோன்றல் என்றும் கூறுவர். முல்லைநிலம் மலைகளில்லாத காடுகளும் அவற்றைச் சார்ந்த இடங்களுமாம். தேவார காலத்தில் திருவொற்றியூருக்கு மேற்கே பாலிநதி வடகரை யோரமாய்த் திருப்பாசூர் வரையிலும் இத்தகைய காடுகளடர்ந்திருந்ததாக அப்பரின் இவ்விருத்தத்திலும்

தானகங் காடாங் காக வுடையது தன்னடைந்தார்
ஊனக நாறு முடைத்தலை யிற்பலி கொள்வதுந்தான்
தேனக நாறுந் திருவொற்றி யூருறை வாரவர்தாம்
தானக மேவந்து போனகம் வேண்டி யுழிதர்வரே.

—அப்பர்-திருவொற்றியூர்-திருவிருத்தம்-4.

சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம், முதலிய நூல்களாலு மறியலாம். முல்லை யென்பது மல்லிகைச் சாதியிற் சேர்ந்த பூவாயினும் மணம் மிகவும் குறைந்ததாய், அழகு அதிகமில்லாமல் காட்டுமல்லி யெனத் தக்க கொடிகளி லுண்டாகும் பூவாம். இது மல்லிகைபோற் சோலைகளில் வைத்து வளர்க்கப்படாமல், அக்காலத்தில் தானாய்க் காட்டில் பரவும். இக்கொடிகள் காட்டிலடர்ந்திருப்பன யானையையு மிடறச் செய்யுமென்பர் பெரியோர் :—

சொல்லரும் புகழான் றொண்டைமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையாற் கட்டிட்டு
எல்லையி லின்ப மவன்பெற வெளிப்பட்
டருளிய விறைவனே யென்று
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயி
லுதனே நரைவிடை யேறீ!
பல்கலைப் பொருளே! படுதுயர் களையாய்
பாசுபதா! பரஞ்சுடரே!

—நம்பியாரூரர்—

இம் முல்லைநிலம் ஒருவித அரணாக மருதவாசிகளுக்கு அமைந்திருந்த தென்பர் புலவோர். சிவனுக்குரிய கொன்றை நிறைந்த நிலமாயினும் இந்நிலவாசிகள் தொன்றுதொட்டு வைணவர்களே. இவர்கள் வழிபடும் தெய்வம் கண்ணன் என்பர் தொல்காப்பியனார். உலக வழக்கில் "இடையனில் ஆண்டியில்லை, குயவனில் தாதனில்லை" யென்பதையு மறிக.

முல்லை நிலம்போல் ஒருவித அரணாக மருத நிலத்திற்கு அமைந்தது குறிஞ்சி. குறிஞ்சியென்பது மலையும் மலையைச்சார்ந்த இடமுமாம். இதில் முருகக்கடவுளை வழிபடும் குறவர்வசிப்பர். குறிஞ்சி நிலத்தின் ஆட்சி வெற்பர், சிலம்பரென்னும் அந்நிலத்தின் உயர்ந்தோரிடமுண்டு. இந்நிலத்தோரது அரசனை விளிக்குங்கால் வெற்ப, சிலம்ப வென்பர். அதனால் நூல்களில் குறிஞ்சி நில மன்னனை வெற்பன், சிலம்பன் எனப் புலவர் கூறுவர்.

குறிஞ்சி குறிஞ்சிநிலம் பெருங்காடுடையது. காடற்ற இடங்களில் கானவர் தினைப்புலன்கள் வகுத்து, அவற்றில் தினைமுதலிய மலைப்பயிர்களைச் செய்தார். இப்பயிர்கள் மழையை எதிர்பாராமலே விளையும். பஞ்சமென்னும் பயம் இம்மலை வாசிகளுக்குச் சற்றும் கிடையாது. தேன்அழித்தும் கிழங்குகளைத் தோண்டியெடுத்தும், தினைமாவைக் கொண்டும் பசியை வென்றனர். பஞ்சத்திற்குத் தஞ்சமாயுள்ளது மலையென்பதை திருநாவுக்கரசு சுவாமிகளும் ஒருவாறு குறித்துக் காட்டியிருக்கின்றார்.

கன்னெடுங் காலம் வெதும்பிக்
கருங்கட னீர்சுருங்கிப்
பன்னெடுங் காலம் மழைதான்
மறக்கினும் பஞ்சமுண் டென்
றென்னொடுஞ் சூளறு மஞ்சனெஞ்
சேயிமை யாதமுக்கட்
பொன்னெடுங் குன்றமொன் றுண்டுகண்
டீர்ப் புகலிடத்தே.

—அப்பர்—தனிவிருத்தம். 10.

இந்நிலத்தில் புலி, யானை, கரடி, காட்டுப்பன்றி முதலிய துஷ்டமிருகங்கள் சதா வசிப்பதால், இந்நிலவாசிகள் மிகவும் தேகதிட முடையவராயும் அஞ்சா நெஞ்சுடையவராயுமிருந்தனர். புலி, கரடி முதலியவைகளை வதைப்பது போல் வழிப்போக்கரையும்

"கள்ளவிழிவிழிப்பர் காணக் கண்ணுற்
கண்ணுனார் போலேகரந்து நிற்பர்"

உயிர்க் கொலை செய்யச் சற்று மிடையார்.

குறிஞ்சிநில வேடர்கள் ஊராளும் அரசர்களுக்கு முற்றும் அடங்கியவர்களல்லர். பெரும்பாலும் இவர்களைத் தானோபாயத்தால் அரசர்வென்று தாம் செய்யும் வேட்டைக்குப் பயன்படுத்தி வந்தனர். அரசர்சேனை வலிவால் முல்லை, நெய்தல், மருதநிலங்களில் இவர்கள் பிரவேசித்துத் தீங்கிழைப்பதில்லை. அங்ஙனம் நேருமாயின், அரசர் படையெடுத்து இவர்களைத் தண்டிப்பதுண்டு. அரசர்கள் ஆஞ்ஞை பாலைநிலத்தில் செல்லுவதில்லை. பாலை, ஊர்

எல்லையாக எண்ணப்படாமையால், அங்குச் செய்யும் குற்றங்கள் கேள்விக்குவரா. நகர எல்லைக்குள் யாதேனும் குற்றம் நடக்குமாயின், அதுதிருவற்ற வூரென்றெண்ணப்படும். சுந்தரன் பாசுரத்தை நோக்குக:—

வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர்
விரவலாமை சொல்லிக்
கல்லினாலெறிந் திட்டு மோதியும்
கூறைகொள்ளு மிடம்
முல்லைத்தாது மணங்கமழ் முருகன்
பூண்டிமா னகர்வாய்
எல்லைக் காப்ப தொன்றில்லை
யாகினீரெத்துக் கிங்கிருந்தீரெம் பிரானீரே?

சுந்தரன், திருமுருகன் பூண்டி. 2.

இத்தகைய வழிபறித்தற்றொழிலை யுடையவர் "வெஞ்சொற்பேசும் வேடர்". தொல்காப்பியத்தில் எயினர், மறவர் என்று சொல்லப்பட்டவர் பறந்தலையில் வசிப்பவரென்று காட்டப்பட்டிருப்பினும், மலைச்சாரலில் வசிக்கும் கானவரோ என்பதற்கும் தேவாரப் பாக்கள் இடங்கொடுக்கின்றன. முருகனை வழிபடும் வெற்பர், சிலம்பர், சூறைகொள்ளலும் ஆறலைத்தலுஞ் செய்யாரென்று நாம் கொள்ளற்பாற்று.

ஐந்தாந்திணையாகிய பாலையென்பது ஆங்கிலத்தார் பகரும் (Desert) மணல் வெளியான காடல்ல. இத்தகைய காடு தென்னிந்தியாவிலில்லாமையால் (அத்தகைய

பாலை பாலையின்பாற்படு மெனினும்,) நமதிலக்கணங்களில் வகுத்த பாலையன்று. நமது தேசப் பாலைநிலத்தில் மரம், செடி, நீர்நிலை, விலங்கு, பூ, மரம், புள், செய்தி முதலியன உள. ஆகையால் தமிழ்ப்பாலை ஆங்கிலேயர் பாலையைப்போல் படுபாழான பாலைநிலமன்று. இதுபயிரற்ற காட்டுப் பிரதேசமாய் நிலவளம் நீர்வளமற்ற நாட்டுப் புறமாயிருப்பது. இதில் வசிப்பவருக்கு வழிபறிகொள்ளை ஜீவனோபாயமா யிருப்பது விதியே.

E. N. தண்ணிகாசல முதலியார்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

7. தாடகை வதைப்படலம்.

கம்பர் கண்ட காம யோகம்

விச்வாமித்திர முனிவன், மன்னவ னளித்த மைந்தர்களிருவரையும் அழைத்துக்கொண்டு, "மேல் அடுத்த வேள்வி முடித்தும் நாம்" என அடவிநோக்கிச் செல்கையில், சரயுவைக்கடந்து, அந்தணர் ஆகுதிப்புகை தழுவித் திகழ்ந்தவோர் அழகிய சோலையை நண்ண, அதனைக் கண்ணுற்ற இராமன், எவர்க்கும் மேலாய எம்பிரானாயினும், இளைஞனென்னுந் தன்மைக்கிணங்கி நடித்தனனாய், 'யாவ திது' என வினவினான். இதற்குக் கோசிகன் விடையளிக்கும் வாயிலாகக் கம்பர், இப்படலத்தின் முதன் மூன்று பாசுரங்களால், எண்ணுதற்கும் இயம்புதற்கும் எளியதாகா வோர் நுண்ணிய வாய்மையைத் தன்மதம் ஒன்று, தனியாய் நிறுவதற்கு நினைத்தார்போல், நாட்டுகின்ற மேன்மையைச் செவ்வனே உணரலாகும்.

கோசிகன் இப்பொழுது அரசிளங் குமரரோடு உற்ற நாடு, முக்கண்ணுடைய மழுவாளி அண்ணல் மோனத்தமர்ந்திருந்தகாலை அந்நிட்டையை, அசுரரால்இடுக்கணுற்ற அமரர் உய்யுமாறு மன்மதன் கலைப்பான் புகுந்து, தன்னுடலை வெண்ணீறு யுகுத்தழிக்க நேர்ந்த அங்கநாடு. மாரவேள் வந்துநின்று அப்பரமன்மேல் மையல்வாளி தொடுத்ததும் இச்சோலையி லிருந்தே. இடங்கள் இவையென்றும் நிகழ்ந்தது இது வென்றும் 'யாதிது வென,' வினவிய இராமனுக்குக் கோசிகன் காட்டிக் கூறுவான்:-

திங்கண்மே வுஞ்சடைத் தேவன்மேன் மாரவேள்
இங்குநின் றெய்யவும் மெரிதரும் நுதல்விழிப்
பொங்குகோ பஞ்சுடப் பூளைவீ யன்னதன்
அங்கம்வெந் தன்றுதொட் டநங்கனே யாயினான்.

[சந்திரன் தங்கிய சடையையுடைய கடவுளின்மேல், மன்மதன் இவ்விடத்திலிருந்து தன்பாணத்தை எய்தான். அதனால்சிவபிரானின் எரிகின்ற நெற்றிக்கண்ணினின்று பொங்கிய கோபத் தீப்பட்டுப் பூளைமலரையொத்த மென்மையாகிய தன் உடல் வெந்து அன்றுமுதல் மன்மதன் சரீரமற்றவனாய் 'அநங்கன்' ஆயினான்]

இந்தச் செய்தியைக் கந்தபுராணத்தி லுள்ள காம தகனப் படலத்தில் விரிவாகக் காணலாம். இச்செய்யுள் பாடுங்காலத்தில் அந்நூல் கம்பருக்குமுன் இருந்ததோ, யாதோ யாம் அறியோம். பொரும்பான்மை இருந்திருத்தலே வேண்டுமென ஊகிப்பதற்கு இடமுளது. ஏனெனில் கந்தபுராணத்திலும், 'சிவபிரானின் தவத்தைக் கலைத்திடு' என்று தன்னைத் தூண்டிய நான்முகனை நொந்தனனாய்,

சூறு வளிவைகிய சூழ லின்வாய்
ஏறு வொருபூ ளையெதிர்ந் துளதேல்
நீறு டியமெய் யுடைநின் மலன்மேல்
வீறாய் வினையேன் பொரமே வுவனே.

[கடுங்காற்று அடிக்கும் இடத்திற்கு எதிராக ஒரு பூளைப்பூ மூராணி ஏறுவது இயலுமாயின், பாவியேன் நானும், திருநீறணிந்த மெய்யுடைய அந்நின்மல மூர்த்திமேல் பெருமையோடு போர்செய்யச் செல்ல நினைப்பேன்]

என்று தன் நொய்மையை உரைத்து முறையிடும் மன்மதனும் பூளைமலரை உபமானமாய்க் காட்டியுள்ளான். இவ்விருபெரும் நூல்களிலும் பொதுவாகப் பூளைப்பூ மன்மதனின் மேனிக்கு உவமையாதல், ஒன்றினை ஒன்று தழுவியேயல்லாது தனித்தனி நேர்ந்திருக்குமாயின் அது அரியதோர் வியப்பாம்.

இச்சொற் பொருத்தம் இவ்விரு நூல்களுக்கு முன்னதென்பதை நாமிங்குக் காட்டப்புகுவது வறிதே மொழிகளைப்பிடித்து அளப்பதற்கன்று. கச்சியப்ப சிவாசாரியாரின் காமதகனப்படலத்தைக் கம்பர் நன்கு ஆராய்ந்து, காமனைப்பற்றி அவர்கொண்ட கருத்துத் தனக்கு இசைந்த தன்றென விடுத்து, அக்காம தகனத்திற்குத் தான் வேறோர் தத்துவம் வகுக்கின்றனர் என்பதை விளக்குவதே இக்கட்டுரை மேற்கொண்ட முயற்சியாம். இம்முயற்சிக்கு முதலாகக் கந்தபுராணத் தாசிரியர் இந்நிகழ்ச்சியை எவ்வாறு அமைத்துளார் என்பதைச் சிறிதிங்குச் செப்புவது இன்றியமையா ததாகின்றது :—

சூரபன்மா முதலாய கண்டகரால் தாங்கொணாத் துன்பமுற்ற வானவர் இத்துயர் தீர்தற்குச் சிவபிரான் பால் உதிக்குமோர் திருக்குமாரனலல்லாது வேறுகதி யில்லை என்பதுணர்ந்து, அக்காலம் மோனத்துறைந்த அம்முதல்வனின் நிட்டையை நீக்கி மலைமகளை அடையு மாறு செய்துவைக்கக் காமக்கடவுளாகிய மன்மதனின் உதவியை வேண்டினர். ஆதலால் நான்முகன் அவனை அழைத்து,

கங்கை மிலைச்சிய கண்ணுதல் வெற்பின்
மங்கையை மேவநின் வாளிகள் தூவி
அங்குறை மோன மகற்றினை யின்னே
யெங்கள் பொருட்டினி லேகுதி யென்றான்.

[கங்கையைச் சூடியவனும் நெற்றியிலோர் கண்ணுடையவனுமாகிய சிவபிரான், இமயவான் புதல்வியை விரும்பி அடையுமாறு, உன்னுடைய பாணங்களை எய்து அவனது நிட்டையைக் கலைப்பதற்கு எங்கள்பொருட்டு நீ இப்பொழுதே போகவேண்டும் என்றான்.]

இச்சொல் கேட்ட மன்மதன், சிவனை அடர்ப்பதென்றால் தனக்கோரீறு தேடிக்கொள்வதல்லால் பிறிதொன்றன்றென வெருவி உளங்கரிந்து நின்றதைக் கச்சியப்ப சிவாசாரியார்,

கிட்டி யரன்செயல் கேடுசெ யென்னும்
கட்டுரை யேவரு காமனு ளெங்கும்
சுட்ட தெனிற்பிறை சூடிய வன்மெய்
அட்டிடு கின்றது மற்புத மாமோ.

[சிவன் செயலுக்கு நீ சென்று இடையூறு செய் என்னும் இச்சொல்லே காமனின் உள்ளத்தை யெல்லாம் பொசுக்கிவிட்ட தென்றால், பிறகு அச்சிவன் இவனது சரீரத்தை அழித்தது அற்புத மல்லவே]

என்று வெகு அழகாக வருணிக்கின்றாரானுலும், 'எம்பொருட் டொன்று செய், என வேண்டுவோர் சொற் கேட்டு, அதனால் தனக்கு அழிவு நேருமாயினும், உவகையோடு அதன்தலை நிற்கவேண்டியவன் யாவரினும் முதல்வனாய்க் காமனே இருத்தல் போக்கி அவன், பேதுற்று உள்ளம் பொசுங்கினன் என்பதைக் கம்பர்வற்றுக்கொள்ளாரென்பது பின்னிங்குத் தெரியவரும். இவ்வாறு உயிரன்றற்றானென்றுள மழுங்கிய மாரவேள் 'என்கண் அடிகட்கு இலையோ அருளே' என நான்முகனைப் பரிவினோடும் வேண்டினனாய்த் தன் முறைப்பாட்டை ஆரம்பித்து, அரனன்றி மற்றெத்தேவருக்கும் தான் முற்காலங்களில் மயல்வினைத்துள திறத்தைச் செப்பிப் பிறகு சிவபிரானது ஆற்றலின் தனிப்பேரளவையுங் கூறித் தன்னாலும் அச்சிவனைக் காமத்தின் சாத்திற்கு இலக்காகக்கொள்ள இயலாதெனத் "தற்பரனை, நானு மயல்செய்வது நன்று இதுவே" என்பதோடு இத் தொழிற்கு இசையேன் என மறுத்துவிடுகின்றான். பிரம்மன் இதன்மேல் அவனுக்கு, "ஈசனது வல்லமையை நீ கூறிய தவ்வளவும் உண்மையே. எல்லாம் அவ்வீசன் செயல். அவனல்லாது ஓரணவு மசையாது. அவனருளின்றி எதுவும் நில்லாது. ஆகையால் நீ இக்கருமம் பூண்டு செய்வதும் அவன்செயலே என நினைத்துச் செல்வதே தகுதி. இதுவெலாம் ஒருபுறமிருக்க, ஒருவர் வந்துன்னை ஓர் உதவிசெய்யென்று வேண்டியகாலை அதனால் உனக்குத் தீங்குவருமென வஞ்சிச் செய்யாது உயிர் தாங்கி நிற்றல் உயர்ந்த குணமாமோ' எனப் பல நீதிகளை எடுத்தோதி,

சூரந்தனில் வலிசேர் சூரபன்ம னேவலின்யாம்
ஆருந் துயர்கொண் டழுங்கினோ மன்னதினித்
தீரும்படிக்குச் சிவனொரு சேயைத் தருவான்
ஓரைம் படைசெலுத்த வுன்னையாம் வேண்டினமே.

[சூரத்திற்கேற்ற வலிமையையும் உடைய சூரபத்மாசுரனது கட்டளையாலே நாங்களெல்லோரும் துயர் கொண்டு வருந்தினோம். அது இனித் தீர்வதற்காகச் சிவன் ஒரு புத்திரனைப் பெற்றளிக்கும் பொருட்டு உனது ஐந்து பாணங்களையும் செலுத்த வேண்டினோம்]

ஆதலினு லெங்களலக் கணகற்றும் பொருட்டுச்
சாதல் வரினுந் தவறோ புகழ்செய்வார்
ஏது வரினுமெதிர் செல்வா ரெம்பணியில்
போதியினி மாறு புகலேலென வுரைத்தான்.

[ஆகையால் எங்களுக்குற்ற கஷ்டத்தை நீக்கும் பொருட்டு நீ சாகத்தான் நேர்ந்தால் என்ன? புகழை வேண்டியவர் எதுவந்தாலும் பின்வாங்கார். இனி மறுக்காமல் எங்கள் காரியத்தின்மேற் செல்," எனப் (பிரம்மன்) சொன்னான்]

மதனனுக்கோ தன் குறையே பெரியது. தன்னுயிர் துறந்தேனும் மற்றவர்க்குற்ற துன்பத்தைக் களைதலென்னுந் தத்துவத்தைப் பாராட்டினனல்லன். புகழொன்றும் வேண்டிலன். உயிரையே நச்சினன். அதலால் புங்கவன் மீது மலர்க்கணை தொடுக்கப் பின்னும் மறுத்தான். இது கண்ட சதுமுகற்குச் சீற்றம் அழன்றது. "நல்ல வார்த்தையாக நான் சொல்வதை மறுத்தாய். இனியென்? சிவன்பால் செல்கின்றாயா, இல்லையேல் உனக்குயான் கடுஞ்சாபம் இடட்டுமா! உனது இட்டம் எது?" என மருட்டினன். என்செய்வான் ஏழை மன்மதன்! சென்றாலுஞ்சாவு.இருந்தாலு மிவனிடுஞ் சாபம்.ரூட்டுப்பட்டாலும் மோதிரக்கையாலேயே குட்டுப்படுவதின் தகுதிநோக்கி

கேளிதொன்று ரைப்பல்வேத கேடுசூழு நினதுவாய்ச்
சூளின்மேலை யியல்பகன்று துன்புழந்து படுதலிற்
காளகண்டன் முன்புசென்று கடியவெய்ய கணைகடூஉய்
மாளினுஞ் சிறந்ததம்ம மற்றுமுய்ய லாகுமே.

[பிரம்மனே,ஒன்று கூறுவேன்கேள். எனக்குக் கேடே தேடும் உன்வாய்ச் சாபத்தால் என் நிலைமையழிந்து துன்பமெய்திச் சாவதைக்காட்டிலும், விஷம் தங்கிய கழுத்துடைய சிவபிரானிற்கு எதிர்சென்று வேகத்தோடென் அம்புகளைச் சொரிந்து மாள்வது சிறந்தது. பின்னேனும் அதனால் நற்கதி பெறலாம்]

என்றே வேண்டா வெறுப்பாய்ச் சிவன்பாற் செல்லுதற்குடன்பட்டான்.

காமத்திற்கெல்லாம் தேவனாகிய மன்மதனின் தன்மையைக் கச்சியப்ப சிவாசாரியார் இவ்வாறு இழிவுபடுத்தினாரென்றே கம்பர் வருந்திஇருத்தல் வேண்டும். கம்பர் கண்டபடி காமத்தின் தத்துவம் இதுவன்று. மெய்யுடைய காதலுக்கும் சுயநயச் செய்திக்கும் வெகுதூரம். காதல் காமம் அன்பு என்பன ஒருபொருட் சொற்கள். காதல் போதிப்பது தற்காத்தலல்ல, தியாகமே. அன்புடைய நாயகன் தன்னைமறந்து தன் மனைவியின் பொருட்டே வாழக் கற்கின்றான். மனைவியும் அன்புடையளாயின் அவ்வாறே. அன்புடைய தந்தை தன்னுடைய வாழ்வைத் தன் மக்களோடு கலந்தழித்துவிடுகின்றான். அன்புடைய புதல்வரும் தம்நினைவை ஈன்றோர்க்குறும் இன்பதுன்பத்துள் துறந்துவிடு கின்றனர். இச்செய்தி நண்பரிருவர்க்கும் ஒக்கும்;அன்புண்டேல் உறவினர்க்கு மொக்கும். அவ்வன்பினதெல்லை மிகமிக மற்றெவர்க்கு மொக்கும். ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையே உதித்த இக்காதல், பிறர் இன்புறக்கண்டு தாம் இன்புறும் பயிற்சிக்கு வித்தாய், மனைவியென்றும் மக்களென்றும் விருந்தென்றுந் தன்னைப் பகிர்ந்துபோக்கும் இல்லறத் தருவாகிப் பின் அவ்வன்பிற்குள் பிரபஞ்சமனைத்துமடங்கத் தனக்கெனவாழாப் பிறர்க்குறியாளனாகப் பழுக்கின்றது. காதலின் மெய்த்திறம் இது. இன்னபடி இல்

லாது, தனக்காக மனைவியென்றும் கணவனென்றும் மக்களென்றும் பெற்றோரென்றும் உளரென்று கருதுகின்ற மனைகள் உளவெனின், அவையொன்றும் காதலால் கட்டப்பட்ட தன்றென்பது நிச்சயம்.

பிரபஞ்சத்தி லுள்ளன யாவு மொன்றே என்னும் வாய்மை வேதத்தின் அந்தம். இவ்வந்தத்தின் அறிவால் விளைவது விருப்பு வெறுப்பற்ற ஓர் துறவுநிலை. இந்நிலையை ஞானயோகிகள் தமது அறிவால் அடைகின்றனர். அதே நிலையை அறிவில்லாக்காலையும் அன்பால் எய்துதற் கியலுமென்பது கம்பரின் கொள்கை.

உன்னருந் துறவு பூண்ட உணர்வுடை ஒருவ னேபோல்
தன்னையுந் துறக்குந் தன்மை காமத்தே தங்கிற் றன்றே.

என இவர் உண்டாட்டுப் படலத்தில் ஊக்கமோடுரைக்கின்றார். விருப்பு வெறுப்பெனும் பேதத்தை அகற்றியது துறவு. தன்னையும் மற்றெல்லாவற்றையும் அறவே வெறுத்துத் துறப்பினும் பின் இவ்விரண்டெனும் பேதமில்லை மற்றுத் தானுள்பட யாவற்றையும் விரும்பியேற்பினும் இரண்டறநின்ற அவ்வபேத நிலையே எஞ்சுகின்றதல்லவோ. சிலர் இவ்விரண்டற்ற உணர்வு பெறுமாறு துறவிகளாகின்றனர். சிலர் அவ்வுணர்ச்சி பெற்றதால் துறக்கின்றனர். " அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழுகலான் " என்னும் நீத்தார் பெருமையின் ஈற்றுக்குறளும், அதற்கு மணக்குடவர், "இதனானே துறவாதாரினும் பெரியாருளரென்று (வள்ளுவர்) கூறினார்" என்று வகுத்த விளக்கமும், ஞானத்தைப்போல் காமமும், உண்மையாய் நிகழ்ந்தவழி, துறவறத்தின் தூய்மையுள் கொண்டுய்க்க வல்லது என்னும் கருத்தை வலியுறுத்துகின்றன.

காமத்தின் தன்மை இன்னபடி இருக்க, அதற்கு அதிதேவனாகிய மன்மதன் தன்னைத்துறக்கத் தரியானாய் நான்முகன் சாபத்திற்கஞ்சியே சென்றானென்பது அவனது தன்மையும், அவனேவும் காதலின் தத்துவமும் முற்றிலும் பொய்த்ததாகும். கந்தபுராணத்திலேயுங் கூட மன்மதன் இவ்வாறு தான் முரணுவது தனக்குரிய தன்மைக்கு ஏற்றதன்றென ஓர்ந்துளான் என்றே எண்ண இடமுளது. ஏனெனில், சாபத்திற்கஞ்சியே போகின்றான் என்பதைத் தன் பத்தினி இரதியினிடம் சொல்ல நாணித் தேவர்களைக் காத்தல்பொருட்டுத்தான் தன் முழுமனதோடு செல்வதாகக் கூறியிருத்தல் வேண்டும். இல்லையேல் இவன் இறந்தபின்,

முன்னாளில் புரமூன்றும் அட்டவன்மேல்
பொரப்போதல் முறையோ வென்று
சொன்னாலுங் கேட்டிலையே அமரர்பணி
புரிவதுவே துணிந்திட் டாயே

எனறும்,

உம்பர்கள்தம் பாலேயோ இந்திரனார்
பாலேயோ உன்னை உய்த்த
செம்பதுமத் திசைமுகத்தோன் பாலேயோ
அரன்செயலைச் சிதைப்பன் என்னா
இம்பரிடை வல்விரைந்து வந்திடுநின்
பாலேயோ ஈசன் கண்ணால்
வெம்பொடியாய் நீயிறந்த இப்பழிதான்
எவர்பாலின் மேவிற் றையோ,

வென்றும் இரதி புலம்பி இருக்கமாட்டாள். சாபத்திற்கு இலக்காக இசையாமலே அவன் ஏகியது இவளறிந்தால் 'சொல்லியும் அவன் கேட்டிலன்' என்று நோவதும், ஈசனுக்கெதிரே தன்னிச்சையால் இகல்கொண்டெழுந்தான்போல் அவனிறந்தபழி அவனையே சாருமெனச் சிந்திப்பதும் ஒருபோதும் அமையாது. ஆதலின் தன் தகைமையை இழித்ததற்கு வேளும் வெள்கினனென்பது சாலப் பொருந்தும்.

எனவே, மன்மதன் தன்னைத்துறக்க மறுத்துளன் என்பன யாவும் கம்பர் அறவே விட்டுவிட்டார். அல்லாது, காமத்திற்குப் பதப் பொருளில் ஆசை என்ற அபவாதமிருக்குமாயினும், செயல் வாய்மையில் அது நீத்தலே புரியுமென்றும், இன்னபடி நீத்தல் வேற்றுமையற்ற ஒரு தனிநிலையை உணர்வித்து நிற்கும் வேதத்தினுள்ளுறைகின்ற இரகசிய மாதலால், ஞானம் அம்மறை பொருளை ஆராய்ந்து அடைவதுபோல் அன்பும் அதனையே அனுபவித்தெய்தும் என்றும் உன்னிய கம்பர், இம்மெய்ம்மையைக் காமனின் செயலிலே காட்டுவாராகி,அது நிகழ்ந்த 'இவ்விடமே வேதத்திற்கு இருப்பிடமாயிற்று' என்று கோசிகன் இராமனுக்குக் கூறும் முகமாக நமக்குப் பின்வரும் செய்யுளில் அறிவுறுத்துகின்றனர்:—

வாரணத் துரிவையான் மதனனைச் சினவுநாள்
ஈரமற் றங்கமிங் குகுதலா லிவணெலாம்
ஆரணத் துறையுளா யங்கா டிதுவுமக்
காரணக் குறியுடை காமனாச் சிரமமே.

[யானைத்தோல் போர்த்திய சிவபிரான் மதனனைக் கோபித்தபோது அவன் தீய்ந்துபோய் அவனது அங்கம் இங்கு விழுந்ததால் இவ்விட மெல்லாம் வேதமே வசிக்கின்ற இடமாகி அங்காடு என்னும் பேரையும் உடையதாயிற்று. இச்சோலையும் அக்காரணம்பற்றிக் காமன் ஆச்ரமம் எனப்படும்]

ஆதலின், "கேளிதொன்றுரைப்பல் வேத" என்று 'வேதனே' எனக் காமன் அயனை வைது, கேடு சூழ்ந்தனன் என்னல் ஒண்ணாது. பிரம்மன் விதித்ததும் மாரன் ஆற்றியதும் வேதத்திற் கிணங்கியவைகளே என்னும் கருத்து, "இவண் எலாம் ஆரணத்து உறையுள் ஆய்" எனும் வாசகத்தில் அடங்கியுள்ளது. ஆயின், முன்னிங்குக் கம்பரின் மதமென நாம் கட்டுரைத்த தவ்வளவும் 'ஆரணத் துறையுளாய்' என்பதை "வேதத்தின் துறைகளில் இருப்பவனே," என்று விச்வாமித்திரன் இராமனை விளிப்பதாகப் பொருள் படுத்தாமல், "இவண் எலாம் ஆரணத்து உறையுள் ஆகி" எனப் பிரிப்பதையே அத்திவாரமாக வுடையதென்று இயம்பவும் வேண்டுமோ. உறையுள் என்பதற்கு, வசிக்கு மிடமென்றும், வாழ்நாள் என்றும் இரு பொருள்க ளுள. அவ்விரண்டு பொருள்களும் இங்குப் பொருந்தும். வேதம் தங்குமிடம் என்பதொன்று. முடிவிலா வேதம் தனக்குரிய நெடுநாள் வாழ்கின்றதும் இவ்விடத்தே என்பது மற்றது. மற்றினி, உறையுள், என்பதை வாழ்நாள் எனக்கொண்டு, அதனோடு 'ஆகி' என்பதை 'முடிந்து' என்னும் பொருளில் சார்த்தினால், "மன்மதன தன்னைத் துறக்கத் தரியானாய்ச் சாபத்திற்கே உட்கி வந்தானாதலால், வேதத்தில் வாழ்நாளே முடிந்து இறுதிக்காலம் இங்கு எய்தியதென்னும்படி ஆயிற்று" என்னும் அர்த்தம் கிடைக்கும். அப்பொழுது கந்தபுராணத்தைப் பரிகசிக்கும் குறும்புமதி கம்பருக்குக் கற்பித்ததாகு மாதலால் இப்பொருளைக் கூறத் துணிந்திலம்.

T. N. சேஷாசலம்.

கம்பராமாயணம்
பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெருது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம் கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலாநிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

ஏமாங்கதத்
திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலாநிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

KAMBAN'S KOSALA
or
A Poet's Plea for Culture
by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

திருத்தக் குறிப்பு.

சென்ற வாரம் நாம் மார்க்க சகாயம் செட்டியா ரவர்களின் திருக்குறள் பதிப்பிற்கு மதிப்புரை எழுதி யதில் அது கிடைக்கு மிடம், "முத்துக் குமாரசாமி செட்டியார் 216, லிங்கசெட்டி தெரு" என்று போட் டிருக்கிறோம். அது தவறு. வீட்டு இலக்கத்தை 131 என்று திருத்திக் கொள்ளவும்.

***

இராமநாதபுர சமஸ்தானம் இராஜ இராஜேஸ்வர சேதுபதி சென்ற சனிக்கிழமை இரவு மூன்று மணிக்கு மதுரையில் காலமாயினர். அவருக்கு வயது நாற்பது கூட ஆகவில்லை.

***

புதுவித ஆகாய விமான மொன்று : பிரஞ்சு தே சத்தைச் சேர்ந்தவர் செய்திருக்கின்றார். இதற்குப் பின் னால் சுற்றும் சக்கரமும் இறக்கைகளும் இல்லை. பக்கத் திலே வைத்திருக்கின்ற சில எந்திரங்களால் எழும் பிப் பறக்கக்கூடியது. இதன் வேகம் மணிக்கு 700 மைலிலிருந்து 1000, மைலுக்குள் ஓடக் கூடியது. ஆகையால் இதனுடன் ஓடினால் சூரியனுந் தோற்பான். கல்கத்தா கோர்ட்டில் ஒருவனுக்கு வேலை இருந்தால் பத்து மணிக்கு இப்பட்டினத்திலே சாப்பிட்டுவிட்டுப் பதினொரு மணிக்குக் கல்கத்தாவில்வேலையை, இவ்விமா னத்தி னுதவிகொண்டு, பார்க்கப்போகலாம்.

***

பர்தோலியில் சமாதானப்பேச்சு மிகவும் ஊக்கத் தோடு நடந்துவருகிறது. ஆனால் இன்னும் முடிவிற்கு வந்ததாகத் தெரியவில்லை. இந்தச் சத்தியாக்கிரகத்தைத் தன் முழுமனதோடு பாராட்டுவதாகச் சரோஜினி தேவி யார் வல்லபாய் பெடேல் அவர்களுக்கு எழுதி இருக்கின் றார். சனங்களும் தாம் மேற்கொண்ட கருமத்தை எதுவரி னும் பின்வாங்காமல் முடிக்கின்ற திடத்தோடிருப்பவர் களாய்க் காண்கின்றனர். கவர்ன்மெண்டாரும் சமாதா னம் செய்துகொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளுக்குப் பெரும் பான்மை ஒவ்வி இருப்பினும், விற்ற நிலங்களைத் திருப்பிக் கொடுக்கின்ற விஷயம் ஒன்றுதான் இப்பொ ழுது இடையே கிடப்பதுபோல் தோன்றுகிறது.

***

ஆதிகாலத்தில் இதுவநேடான் :—என்றவோர் சந்து இருந்தது. இது பல்லிச் சாதியைச் சேர்ந்தது. ஆனால் முப்பதடி நீளம். சில சமயங்களில் இது பின்னிரு கால் களால் நடந்திருத்தலும் கூடுமாம். இப்பொழுது இந்தச் சந்து ஒன்றுகூட இல்லாமல் அழிந்து போய்விட்டது. அகப்பட்ட சில எலும்புகளைக்கொண்டு இது இன்ன விதமா யிருந்திருக்க வேண்டுமென்று ஊகித்திருக்கி றார்கள்.

இப்பொழுது ஜப்பானில் இரயில் பாலமொன்று கட்டுதற்குத் தரையை தோண்டியபோது இருபத் தோரு முட்டைகள் அகப்பட்டனவாம். அவை இந்தச் சந்துவினதாகத்தான் இருத்தல் வேண்டுமென்றும், ஒரு கோடி வருடங்களுக்கு முன்னால் அவை இடப்பட்டவை என்றும் அநுமானிக்கின்றனர்.

***

கஞ்சம் ஜில்லாவிலுள்ள ஜார்தா ஜமீன்தாராகிய ஸ்ரீ கிஷோர் சந்தா சமந்தராய் தேவ் என்பவர், லூயி கான்ஸ் பேவர் என்னும் ஜர்மனிய மாதை விவாகம் செய்து கொண்டிருப்பதாக, "டெய்லி ஆஷா" என் னும் பத்திரிகை பிரசுரித்திருக்கிறதாம். சென்னைக் கீழ்ப்பாக்கத்தில் ஜூலை 20உ அன்று மிஸ் பேவர் ஹிந்து ஆக்கப்பட்டாராம். பண்டிட் கங்காதர வித்யா பூஷணம் ஆசாரியாக விருந்தார். இம்மாது ஏற்றுக் கொண்ட புதுப்பெயர் சாந்த தேவி, இதற்கு மூன்று நாள்களுக்கப்புறம் ஜமீன்தார் சாந்த தேவியை, இந்து மதச் சடங்குகள்படி விவாகம் செய்து கொண்டார். விவாகம் செய்து வைத்ததும் அதே பண்டித கங்காதர வித்யாபூஷணர்தாம்.

சமீன்தாரருக்கு முதல் மனைவியார் உயிரோடிருக்கின் றார். இப்புது மனைவியோடு அவர் கோபால புரத்தில் ஒரு ஆங்கிலேய ஹோட்டலில் தற்காலம் தங்கி இருக் கின்றார்.

***

K. T. பால் அவர்கள் சமீபத்தில் குண்டூரில் நடந்த ஸோஷியல் ஸர்விஸ் கான்பரன்சில் சனசமூகத்திற்குத் தொண்டு புரிவதற்கு வேண்டிய மனப்பான்மையையும் முயற்சியையும்பற்றி மிக்க அறிவோடு பேசியிருக்கின் றார். அப்பிரசங்கத்தின் முடிவுரை பின்வருமாறு :—

"நமது முன்னோர் மானுட இயற்கையை நன்கறிந்த வர். பிறர்பொருட் டுதவுகின்ற ஊழியத்தைத்தான் அவர் கள் யோகம் என்றழைத்தனர். இஃதோர் பயிற்சி முறை யாம். கடவுளை நாடிநடக்கும் நீண்டதோர் பயணநெறி யில் ஜீவான்மா தேர்ச்சியுற்று முதிர்வதற்கு இத்தொண்டு புரி பழக்கத்தை ஒருபயிற்சியாக நாங்களும் மதித்தோம். பக்தியோகத்தோடும் ஞானயோகத்தோடும் கர்மயோக மும் சேர்க்கப்பட்டு, எல்லாமார்க்கங்களையும் தொடர் வதே தகுதி என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் தொண் டெனும் கருமங்களாற்றிப் பயில்கின்ற மார்க்கத்தின் முக்கியமான சாரம் என்னவெனில் சுயநயம் கலவாது நிற்கின்ற விடுதலை நிலையேயாகும். உத்தமமான உப தேசம் யாவும் நுண்ணிய இவ்விஷயத்தைப் பற்றிவரு வன. எந்தக்கருமம் செய்தாலும் அது கருமயோகம் என் றாகாது. நிஷ்காம்யகர்மம் புரிவதே கர்மயோகம் எனப் படும். வித்தியாசம் இதனில்தான் இருக்கின்றது.

இருதயமடங்கலும் அன்பே நிறைந்திருக்கத் தன் நினைவிற் கங்கே இடமிருக்கப்படாது. தன்னின், தன் குடும்பத்தின், கூட்டத்தின், சாதிமத இனத்தாரின் சுகங் களையும் இலாபங்களையும் கருதிச் செய்வானொருவன் சில கருமங்களென்றால் அது கருமயோகமாகாது. தேசத் தின் நன்மையைக் கருதிச் செய்கின்ற ஊழியத் தொண்டு கள்கூட கருமயோக மல்ல. இவ்வாறு சுகலாப நன்மைக ளொன்றும் நினையாமல், மாறுடப்பரிவே பிரதானமாய் மனச்சாக்ஷி தாழாமல் பிடித்துந்த, ஹிருதயமானது பிறர் படுதுயரங் கண்ட மாத்திரத்திலேயே தன் துயரமாயதை இயற்கையிலுணர்ந் தனுபவித்து, காலுங் கையும் முழு மெய்யும் மனமும் இடுக்கண்களைய விரைவதுவே நிஷ் காம்ய கர்மத்தைக் காண்கின்ற காட்சி. இப்படித் தானு கவே தோன்றி இடையறாது தொடர்ந்து, தானென்ற அரிப்புச் சிறிதுமின்றி நிகழ்கின்ற செயல்களையே ஊழி யம் அல்லது தொண்டு என அழைத்தல் தக்கதாம். இது தான் நிஷ்காம்ய கர்மம். இது மாத்திரமே யோகத்தி லொன்றாக அமையக்கூடும்."

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)